Registered as a NewsPaper


விலை ரூபா :10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 2037 | பங்குனி-14 | 28-03-2006 | செவ்வாய்க்கிழமை | ஓசை-38



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-14069) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# பாக்.புலனாய்வுத்துறை உதவியுடன் முஸ்லீம் ஜிகாத் குழு இயங்குகிறது

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**இலங்கையின் கிழக்குப் பகுதியில், பாகிஸ்தான் இராணுவப் புலனாய்வுத் துறையின் உதவியுடன் முஸ்லிம் ஜிகாத் குழு இயங்கி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தகவல் வெளியிட்டுள்ளார். அவுஸ்திரேலிய ஏ.பி.சி தொலைக்காட்சியின் 'ஏசியா பசுபிக் போக்கஸ்' நிகழ்ச்சிக்கு அன்ரன் பாலசிங்கம் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.**

அச் செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; **கேள்வி:** சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள துணை இராணுவக் குழுக்களின் நிழல் யுத்தத்தால் அமைதிப் பேச்சுக்கள் சீர்குலையும் என்று தெரிவித்திருந் தீர்கள். இது தொடர்பில் என்ன ஆதாரங்களை வைத்திருக்கிறீர்கள்?

பதில்: இது தொடர்பில் ஏராளமான ஆவணங்கள், வரைபடங்கள் உள்ளிட்ட மேலதிக தகவல்களை சிறிலங்கா அரசாங்கத்திடம் கொடுத்திருக்கிறோம்.



அதில் அக்குழுவினர் இயங்கி வருவதையும், அவர்களது தலைமை, அவரது கட்டளை அமைப்பு, அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அக் குழுக்களினது முகாம்கள் ஆகி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு புதியதலைவர் இளம்பரிதி ,ஞானத்துடன் சந்திப்பு

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பார் ஞானம் ஆகியோரை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்களுக்கும் புதிதாக் பொறுப்பேற்ற இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பளையில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஏற்படுத் துப் பட்டுள்ள போர்நிறுத்த மீறல்கள், மக்களது பாதுகாப்புகள் குறித்தும் கலந் துரையாடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானத்தினை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவா உல்ப்ஹென்றிக்சன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

-இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில்-

## புலிகளின் அரசியல் பணிக்கு இராணுவத்தளபதி கடும் எதிர்ப்பு!

சிறிலங்கா ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பணிகள் மேற்கொள்வதற்கு இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த சரத்பொன்சேகா, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மிகவும் பலவீனமான பகுதி என்பது அரசாங்கப் பகுதிகளில் விடுதலைப் புலிகளை அரசியல் பணி மேற்கொள்ள அனுமதிப்பதுதான் என்று தெரிவித்துள்ளார். கடந்த வாரம் தங்களது அரசியல் அலுவலகங்களை விடுதலைப்புலிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக் குழுத்தலைவர்- தமிழ்ச்செல்வன் சந்திப்பு

## படையினருக்கு எதிரான போராட்டத்தால் யாழ்.கல்விச்சாலைகள் வெறிச்சோடின

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன வளாகத்துள் அத்துமீறி நுழைந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட அராஜங்களைக் கண்டித்து நேற்று யாழ்.குடாநாட்டு மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் அனுஷ்டிக்கப்ப டும் இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம், தனியார் கல்வி நிறுவன மாணவர் ஒன்றியம் உட்பட அனைத்து மாணவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்குத் தடை

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினரால் புத்தளத்தில் இருந்து கிழக்கே சங்கமான்கண்டி வரையான இலங்கை, இந்திய சர்வதேசக் கடல் எல்லையை ஒட்டிய கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடற்படையினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விடுக்கப்பட்டுள்ள இந்தத் தடை குறித்த அறிக்கையில் மூன்று தொன்னுக்கு மேற்பட்ட படகுகளும், இருபத்தெட்டு அடிக்கு மேற்பட்ட நீளமுள்ளதும், ஒரு நாளுக்கு மேல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுவீடாகச் சென்று மாணவரை அழைத்துவர அதிபர்களுக்கு படையினர் உத்தரவு

**-மாணவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று மிரட்டல்**

யாழ். நகரப்பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்களையும், ஆசிரியர்களையும், அச்சுறுத்தும் நடவடிக்கைகளை நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தின் இவ் அராஜகங்களைக் கண்டித்து குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளினதும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைத் தவிர்த்து பகிஷ்கரிப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டார்கள்.

இந்நிலையில் அலுவலகக் கடமைகளை கவனிப்பதற்காக பாடசாலைக்கு சென்ற சில ஆசிரியர்களையும், அதிபர்களையும் மிரட்டி அச்சுறுத்தும் நடவடிக்கைளை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக யாழ். நகரப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா இணக்கப்பாட்டிற்கு எதிராக அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது

### புதிய கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் விரிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

ஜெனீவாவில் இணக்கப்பாடு கண்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் எந்த விதமான அக்கறையுமற்று இருப்பதையும் அதற்கெதிர்மறையான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவருடான சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார். புதிதாக பதவியேற்ற இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், அரசியல் துறைப் பொறுப்பாளர் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். முற்பகல் 11.45 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் உல்ப்ஹென ரிக்சன் உட்பட்ட குழுவினரும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இச் சந்திப்புக்குறித்து ஊடகவியலா ளர்களுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவிக்கையில்; புதிதாக கண்காணிப்புக் குழுவிற்கு தலைமையேற்றிருக்கும் புதிய தலைவர் எம்மோடு அறிமுக சந்திப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் துணைவேந்தராக பரமேஸ்வரன் நியமனம்

(வலிகாமம்)

யாழ்- பல்கலைக்கழகத்தின் இடைக்காலத்திற்கான பதில் துணைவேந்தராக யாழ்-பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.வி.பரமேஸ்வரன் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்-பல்கலைக்கழக உடற் தொழிற் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான எஸ். வி.பரமேஸ்வரன் நேற்று முதல் பல்கலைக் கழகத்திற்கான துணைவேந்தர் ஒருவரை நியமனம் செய்யும் வரை தற்காலிகமாக கல்வி நிர்வாகசேவைகளை கவனிக்குமாறு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (37)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

தயானந்தன் புஸ்பமலர் என்பவரது தேசிய அடையாள அட்டை முகமாலை சோதனைநிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (7587)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு 6 ஆம் வாட்டாரம் பொக்கணை வீதியில் அமைந்துள்ள சிறுதென்னை பிரயோசனங்களுடன் கூடிய 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி · செ.பாலன்ராஜ் அழககம், முல்லைவீதி, புதுக்குடியிருப்பு (7443)


# கிளி.தமிழீழ வைப்பகக் கிளை இடம் மாற்றப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கருகில் இயங்கி வந்த தமிழீழ வைப்பகத்தின் கிளை கரடிப்போக்குச் சந்தியில் புதிய கட்டடத்தில், கணினி வசதிகளுடன் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

இக்கிளையின் மூலம் கிளிநொச்சி நகர வர்த்தகர்கள், விவசாயிகள் பாடசாலை மாணவர்கள் எனப்பலர் பல்வேறு நன்மைகளையும் பெற்று வருவதுடன் சேமிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளை முதன்மைக் கிளையாக நாச்சிக்குடாச் சந்தியிலுள்ள புதிய கட்டடத் தொகுதியில் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

# மன்னார் தாழ்வுப்பாட்டில் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மன்னார் தாழ்வுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர். தாழ்வுப்பாட்டுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தண்ணீர்தாங்கி மீது உந்துருளி மோதியபோதே விபத்து நிகழ்ந்துள்ளது.

இதன்போது மூவர் படுகாயம் அடைந்து மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மயூரன் என்ற இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் பொது மருத்துமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

படுகாயம் அடைந்த ரஜனி, சிராஜ் ஆகியோர் மன்னார் மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் இவ்விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

## ஜெனீவா...

பினை மேற்கொண்டிருந்தார். இதன்போது பல விடயங்களை நாங்கள் விரிவாக கலந்துரையாடினோம். குறிப்பாக யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பான விடயங்களே எங்களால் கூடுதலாக வலியுறுத்தப்பட்டது.

ஜெனீவாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆயுதக்குழுக்களினுடைய ஆயுதங்களையும் செயற்பாடுகளை- எமது தாயகப் பிரதேசத்தில் இல்லாமல் செய்வதுமான அந்த தீர்மானங்களானது நடைமுறைபபடுத்தப்படாது அதற்கு எதிர்மறையான அவர்களுடைய நடவடிக்கைகள் மேலும் தயாகப்பிரதேசத்தில் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதும் அண்மைக்காலத்தில் இராணுவத்தோடு சோந்தியங்கும் ஆயுதக்குழுக்களும் இராணுவமும் இணைந்து எங்களுடைய போராளிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுவருவதும் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற எங்களுடைய மக்கள் கொல்லப்படுவதும் ஆட்கடத்தல், வன்முறைகள், தாக்குதல்கள் என தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்திலே மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இது போன்ற விடயங்களை நாங்கள் சுட்டிக்காட்டி இது நிச்சயமாக ஜெனீவாப் பேச்சின் இணக்கப்பாட்டை சீர்குலைக்கின்ற நடவடிக்கையே தவிர மாற்றங்கள் கொண்டுவரும் நடவடிக்கையாக நாங்கள் இதைக் கருதவில்லை என்பதை நாங்கள் அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அடுத்த கட்ட முயற்சிகளைக் கூட இது நிச்சயமாக பாதிப்புக்குள்ளாக்கும் என்பதையும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:-** இதற்கு அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில் என்ன?

**பதில்:-** அதாவது புதிதாகவே தான் பொறுப்பிற்கு வந்திருக் கிறார் எனவும் எதிர்வரும் 1ஆம் திகதியிலிருந்து தான் தன் பணியை பொறுப்பேற்கவுள்ளதாகவும் கூறியிருக்கின்றார். இத்தோடு இவ் விடயத்தினை தான் நிச்சயமாக கரிசனைக்கு எடுப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறியிருக்கின்றார்.

**கேள்வி:-** அண்மைநாட்களாக திருகோணமலை மற்றும் புத்தளம் பகுதிகளில் நடந்த சில சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள்மீது சிறிலங்கா அரசாங்கம் குற்றம் சுமத்தி பாரியளவில் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** அதைப்பற்றி கண்காணிப்புக்குழுவினர் இன்று எதுவிதமான கருத்தையும் முன்வைக்கவில்லை இலங்கை அரசாங்கத்தின் விசமத்தனமான பிரச்சாரம் என்பது இன்று நடப்பவை அல்ல. தொடர்ச்சியாகவே சிறீலங்கா அரசாங்கமும் இராணுவமும் இப்படியான பரப்புரைகளை செய்துகொண்டிருக்கின்றார்கள் என்ன சம்பவங்கள் நடந்தாலும் அதை விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி புலிகள் மீது ஒரு அபாண்டமான பழியை சுமத்துகின்ற நோக்கோடு செயற்படுகின்றமை வழமையானதே.

ஆகவே சிறிலங்கா இராணுவமோ,அரசாங்கமோ கூறுகின்ற குற்றச்சாட்டுக்கள் எந்த விதத்திலும் ஆதாரமற்றவை ஆகவே அதற்கு நாம் பதில் கூற வேண்டிய தேவை இல்லை என்றே நாம் கருதுகிறோம். கண்காணிப்புக்குழு அப்படியான முறைப்பாடுகளையோ குற்றச்சாட்டுக்களையோ முன்வைத்தால்.நாங்கள் அதற்கு தகுந்த விளக்கத்தை வழங்கத் தயாராக வுள்ளோம்.

**கேள்வி:-** தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள் அடுத்தகட்ட பேச்சுக்களைப் பாதிக்குமா?

**பதில்:-** நிச்சயமாக ஏனெனில் ஒரு பேச்சு வார்த்தையின் போது இணக்கப்பாடுகாணுகின்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அது நடைமுறைப் படுத்தப்பட்டாது அதற்கு எதிர்மறையாக நடவடிக்கை களை செயற்பாடுக்ளை தீவிரப்படுத்துகின்ற பொழுது அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கு நாம் சென்று பேசுவ தென்பது ஆரோக்கியமானதாகவோ எந்த விதத்திலும் முன்னேற்றகரமானதாகவோ இருக்காது. ஆகவே அது பற்றிய எமது நிலைப்பாட்டை இன்றும் வலியுறுத்திக்கூறுகின்றோம். (ச,தீ)





## கே.ரி. நிர்மாணிகள் (PVT) LTD

புதுக்குடியிருப்பு

## பணிநிலை வேண்டுகை

எமது நிறுவனத்தில் பணியாற்ற பின்வரும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

பணிநிலை:- பொறியியலாளர் (குடிசார்)

பணிநிலை:- தொழில் நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்)

பணிநிலை:- வேலைமேற்பார்வையாளர்

(க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்)

சம்பளம்:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

குறிப்பு:- முன்அனுபவம் இருப்பின் வரவேற்கத்தக்கது. 30.04.2006 ஆம்திகதிக்கு முன்பதாக எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்,
கே.ரி. நிர்மாணி (PVT) LTD,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(சி-14192)


## பாக்....

யவை தொடர்பிலான தரவுகளும் இடம்பெற்றுள்ளன.

சிறிலங்கா அரசபடைகளுடன் சேர்ந்து அக்குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதை நிரூபிக்கும் ஆதாரங்களையும் நாம் வைத்திருக்கிறோம்.

**கேள்வி:** அவர்களைக் கட்டுப் படுத்துவது யார் என்று கருதுகிறீர்கள்? ஏனெனில் அவர்கள் உங்களுடன் தாம் சண்டை நடத்துவதாக கூறுகிறார்கள்.

**பதில்:** துணை இராணுவக் குழுக்களில் பெரும்பாலானவை சிறிலங்கா இராணுவப் பிரதேசங்களில் இராணுவ முகாம்களிலிருந்தே இயங்குகின்றன. சிறிலங்காவின் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமானது உண்மையில் அமைதியை விரும்பினால், இயல்பு நிலைமை உருவாக்க வேண்டுமெனில் துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களைக் களைந்து வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

**கேள்வி:** இந்த துணை இராணுவக் குழுக்களில் ஒன்று உங்களது முன்னாள் கிழக்குப் பிராந்திய தளபதி கருணாவால் இயக்கப்படுகிறது அது தொடர்பில்,

**பதில்:** நிதிமோசடி உள்ளிட்ட பல்வேறு ஒழுங்கீனக் குற்றச்சாட்டுகள் அவர் மீது கூறப்பட்டது. மேலும் வயது குறைந்தோரை படையில் சேர்த்தார். கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான குற்றச்செயல்களை அவர் மேற்கொண்டார்.

சிறிலங்கா அரசபடைகள் அவருக்கு உதவியாக புகலிடம் அளித்து, ஆதரவளித்து, விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துகிற நாசகார செயற்பாட்டுக்கு உதவியாக இருந்தது. அது மிகவும் ஆபத்தான செயற்பாடாக இருந்தது.

**கேள்வி:** முஸ்லிம் ஜிகாத் குழு இயங்கிவருவதாக நீங்கள் கூறியிருந்தீர்கள். இந்தக் குழு பற்றி நீங்கள் சொல்ல முடியுமா? ஏனெனில் இந்தக் குழு கிழக்குப் பிரதேசத்தில் இல்லை என்று முஸ்லிம்கள் மறுத்து வருகின்றனர்.

**பதில்:** முஸ்லிம் அரசியல் அமைப்புகளின் தலைவர்கள் ஏன் இதை மறுக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். சிறிலங்காவில் முஸ்லிம் பயங்கரவாதக் குழு இயங்குவதானது சர்வதேச சமூகத்தை நிச்சயம் பாரியளவில் கவலை கொள்ளச் செய்யும் என்பதாலே அவர்கள் இத்தகைய மறுப்பை வெளியிடுகின்றனர்.

இந்த ஜிகாத் அமைப்புக்கும் பாகிஸ்தானிய இராணுவப் புலனாய்வுத்துறைக்கும் உள்ள உறவு தொடர்பான ஆதாரங்களை நாம் வைத்திருக்கிறோம். ஆகையால் அவர்கள் பொதுவாக நிராகரிக்கிறார்கள். ஆனால் எங்களிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன. முஸ்லிம் தலைவர்கள் எங்களைத் தொடர்பு கொண்டால் மேலதிக ஆதாரங்களை கையளிப்போம்.

**கேள்வி:** தற்போதைய சர்வதேசச் சூழலில் ஒரு அரசாங்கமே பாகிஸ்தானுடன் தொடர்புடைய இத்தகைய முஸ்லிம் ஜிகாத் குழு இயங்க அனுமதிப்பது..

**பதில்:** ஆம். அது ஆபத்தானது. ஆனால் சிறிலங்கா அரசாங்கமானது பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் நெருங்கிய உறவு வைத்துள்ளது என்பது எமக்கு வருத்தமளிக்கிறது. பாகிஸ்தானிடமிருந்து இராணுவ உதவி மற்றும் பயிற்சிகளை சிறிலங்கா பெற்றுக்கொண்டு வருகிறது. மேலும் சீனாவுடனும் நெருங்கிய உறவை சிறிலங்கா கொண்டிருக்கிறது.

ஆகையால் இந்த விடயத்தில் பாகிஸ்தானின் தலையீடு குறித்து நாம் பாரிய கவலை கொள்கிறோம். ஜிகாத் குழுவுக்கு பயிற்சியும் உதவிகளும் செய்வதானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த ஜிகாத் குழுக்கள் பற்றி மேலதிகமாக இந்தியா அறிந்துகொள்ளும் போது இந்தியாவிலும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

**கேள்வி:** கடும்போக்கு அரச தலைவருடனான உறவு நிலை தொடர்பாக...

**பதில்:** உறுதிமொழிகளை அளித்துவிட்டு எதையும் செய்யாத மென்மையான போக்குக் கொண்டவர்களைவிட கடும்போக்காளர்களுடன் உடன்பாட்டுக்குத் தயாராக இருக்கிறோம். ஆகையால்தான் இந்த சவாலான நிலைமையை எடுத்துக்கொண்டு கடும்போக்காளர்களுடன் பேசி வருகிறோம். இந்தப் பிரச்சினையை அவர்கள் எப்படி கையாள்கிறார் என்று பார்க்கிறோம்.

சிங்களக் கடும்போக்காளர்கள் தான் உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தடங்கலாக உள்ளனர் என்ற உண்மையை சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

**கேள்வி:** ஆகையால் அரசாங்கத்துக்கு எத்தகைய அழுத்தத்தை சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும்?

**பதில்:** சிறிலங்காவின் அரசியல் அமைப்பு முறை மீதான செல்வாக்கை சர்வதேச சமூகம் செலுத்த வேண்டும். ஏனெனில் சிறிலங்கா அரசாங்கமானது முழுவதுமே வெளிநாட்டு நிதியை நம்பி, உதவி வழங்கும் நாடுகளை நம்பியே உள்ளது.

சர்வதேச சமூகத்தின் உதவி வழங்குகிற நாடுகளின் இணைத் தலைமை நாடுகள் போதுமான அழுத்தத்தை சிறிலங்கா அரசியல் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இதனால் ஓரளவாவது தமிழ்மக்களுக்கு சாதகமாக நடைபெறலாம். தற்போதைய இறுதி நிலைகளிலாவது இதை சர்வதேச சமூகம் செய்யலாம் என்றார் அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

-தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த-

# 22 ஈராக்கிய பொதுமக்கள்
# அமெ.விமானக் குண்டு வீச்சில் பலி!

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப் படையினர் மசூதி ஒன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 22 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

இந்த மசூதியில் தீவிரவாதிகள் பதுங்யிருப்பதாகக் கூறியே அமெரிக்கப் படையினரும், பொலிசாரும் மசூதியை சுற்றி வளைத்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

அப்போது வேறு பகுதியில் பதுங்யிருந்த தீவிரவாதிகள் அமெரிக்கப் படையினர் மீது எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள். நீண்ட நேரம் இந்த துப்பாக்கிச் சண்டை நீடித்தது. தீவிரவாதிகளை வேட்டையாடுவதாகக் கூறி அப்பாவிப பொதுமக்கள் 22 பேரைக் கொன்றது அதிபர் அமிது கர்சாயை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இது தொடர்பாக அவர் தனது அமைச்சர்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.



யப்பான் தலைநகர் டோக்கியோவில் பூமி சுற்றுச்சூழல் அமைப்பு சார்பில் நேற்று முன்தினம் கண்காட்சி நடந்தது. அதில் 3.5 மீற்றர் நீளமும், 80கிலோ எடையும் கொண்ட டைனோசர் ரோபோ நடந்து வருகிறது. புதிய எரிசக்தி மற்றும் தொழிற்துறை தொழில் நுட்ப மேம்பாட்டு அமைப்பு இதை உருவாக்கியுள்ளது.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள குடியிருப்புப் பகுதியில் குண்டு வெடித்தது. இதில் இரண்டு பேர் பலியாயினர்

# ஈரானில் பூகம்பம் ஒருவர் பலி; ஒருவர் காயம்

(தெகரான்)

ஈரான் நாட்டின் ஹோர் முஸ்கன் மாநிலத்தில் பின் என்ற இடத்தில் பூகம்பம் ஏற்பட்டது.இதில் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தப் பூகம்பத்தால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் வீதிப்போக்கு வரத்துகளும் பாதிக்கப்பட்டன.

# சீன நகரங்களில் விஷவாயு கசிந்தது; 10,000 பேர் வெளியேற்றம்

(பீஜிங்)



சீனாவின் நகரங்களில் விஷவாயு கசிந்ததால் பத்தாயிரம் பேர் நகரங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு சீனாவில் சிசுவான் மாகாணத்தில் காக்கியாவோ நகரத்தில் சாங்கிங் நகரசபை சார்பில் அந்தப் பகுதியில் எண்ணைக் கிணறு தோண்டப்பட்டது. எண்ணைக்கிணறு தோண்டும் பணி முடிவடைந்து உற்பத்தியை தொடங்குவதற்கு முன் சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது அந்த எண்ணைக் கிணற்றிலிருந்து விஷத் தன்மையுள்ள எரிவாயு கசிந்தது. காக்கியாவோ மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்களை விஷவாயு சூழ்ந் தது. எந்த நேரத்திலும் பெரியளவில் விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படும் நிலை உருவானது.

இதையடுத்து எண்ணைக் கிணற்றில் வாயுக் கசிவைத் தடுக்கும் முயற்சியில் ஊழியர்கள் அவசரஅவசரமாக ஈடுபட்டனர்.

அங்கு மீட்புப் படையினர் நூற்றுக்கணக்கில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நகரங்களில் உள்ளவர்களை அவசர அவசரமாக பாரவூர்திகளிலும், பேருந்துகளிலும், வேறு இடத்திற்கும், அப்புறப்படுத்தி வருகிறார்கள். இது வரை பத்தாயிரம் பேர் வெளியேற்றப்பட்டு விட்டனர்.

கடந்த 2003ஆம் ஆண்டில் இதேபோல் ஒரு எண்ணைக் கிணற்றில் வாயு கசிந்து 243 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# பெட்ரோல் விலை உயர்வைக் கண்டித்து மலேசியாவில் ஆர்ப்பாட்டம்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பெட்ரோல் விலை உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் போது ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மலேசியாவில் பெட்ரோல் மானியத்தில் ஆறாயிரம் கோடி ரூபாயை குறைப்பதற்காக பெட்ரோல் விலை 40 சத வீதம் உயர்த்தப்பட்டது. டீசல் விலை இரு மடங்காக உயர்த்தப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கோலாலம்பூரில் ஆர்ப்பாட்டம் நடந்தது. 88 மாடி பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுர கட்டடத்திற்கு வெளியே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

மலேசிய தொழிற்சங்க காங்கிரஸ் தலைமையில் 300 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீரைப் பாய்ச்சி அடித்து ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தனர்.

# தலைதுண்டிக்கப்பட்ட 30 உடல்கள் பாக்தாத்தில் மீட்பு

(பாக்தாத்)

ஈராக்கில் பாக்தாத் அருகே தலை துண்டிக்கப்பட்ட 30 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் அருகே பகுபா என்ற இடத்தையொட்டிய ஒரு கிராமத்தில் 30உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பெரும்பாலன உடல்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்தன.

இந்தத் தகவலை ஈராக் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.ஷியா-சுனி பிரிவு முஸ்லிம்களுக்கு இடையே நடைபெற்று வரும் மோதல் காரணமாக இந்தப் படுகொலை நடந்தி ருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

உலகின் பக்கம்

# தேர்தலில் போட்டியிட்ட பெண் பொலிசார் பணி நீக்கம்

(சென்னை)

தி.மு.க சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்புமனு வழங்கிய பெண் பொலிசார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நாமக்கல்லிலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணி புரிந்து வந்த இலட்சுமி என்பவர் சேந்தமங்கலம் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து தி.மு.க தலைமையிடம் மனு செய்திருந்தார்.

காவல்துறையில் உள்ளோர் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற உத்தரவுள்ளது. தி.மு.க.வில் விரும்பு மனு செய்துள்ள இலட்சுமி குறித்து பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்த நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆயுஷ் மணி திவாரி உத்தரவிட்டிருந்தார். பொலீசார் நடத்திய இரகசிய விசாரணையில் தேர்தலில் போட்டியிட இலட்சுமி மனு செய்தது தெரிய வந்தது.

இதனையடுத்து இலட்சுமியை தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்ய நாமக்கல் மாவட்ட காவல் கண் காணிப்பாளர் உத்தரவிட்டார்.

# அ.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு
# ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதா போட்டி

(சென்னை)

அ.தி.மு.க வேட்பாளர்களின் பட்டியல் நேற்று வெயிடப்பட்டது ஆண்டிப்பட்டி தொகுதியில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா போட்டியிடுகிறார்.

அ.தி.மு.க சார்பில் தேர்தலில் போட்டியிட 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விருப்ப மனு கொடுத்தனர். அவர்களது மனுக்களில் கணினியில் தொகுக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டன.

ஒவ்வொரு தொகுதிக்கு தலா மூன்று வேட்பாளர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு பட்டியலில் இருந்து பொருத்தமான ஒருவரை தேர்வு செய்ய முதல் அமைச்சர் ஜெயலலிதா மாவட்ட செயலாளர்கள் மற்றும் அ.தி.மு.க .முக்கிய நிர்வாகிகளுடன் கடந்த இரு தினங்களாக ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனை முடிவில் அ.தி.மு.க வேட்பாளர்கள் பெயர் இறுதி செய்யப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டது நேற்று அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை முதல்- அமைச்சர் ஜெயலலிதா அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்.அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 182 பேரில் 24 பேர் பெண் வேட்பாளர்களாவார்.

## மார்க்சீய கம்யூனிஸ்ட் சார்பில் 3 பெண் வேட்பாளர்கள்

(நாகர்கோவில்)

தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் மார்க்சீய கம்யூனிஸ்ட் சார்பில் போட்டியிடும் 13 வேட்பாளர்களில் மூன்று பேர் பெண்கள் என்று அக்கட்சியின் மாநிலச் செயலர் என். வரதராஜன் தெரிவித்தார்.மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி யின் தமிழ் மாநிலச் செயற்பாட்டுக்குழுக் கூட்டம் இன்றும், மாநிலக் குழுக் கூட்டம் நாளையும் நடைபெறுகிறது.இதையடுத்து சட்டப் பேரவைத் தேர்தலில் கட்சிச் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும்.

# ஆலய வருடாந்த உற்சவத்தில் பொலித்தீன் பாவனை தடை

(விசுவமடு)

ஆலய உற்சவங்களில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய் துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரி வித்துள்ளார்.கண்டாவளை பிரதேசத்திலுள்ள புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அரசதிணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலய பரிபாலன சபையினர் இணைந்து எடுக்கப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொலித்தீன் பாவனை ஆலய உற்சவ காலத்தில் ஆலயச்சூழலில் பாவிப்பதறகு இதன் மூலம் முற்றாகத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. (46)

# ஊரியான் கிராமத்தில் நான்கு வேலைத் திட்டங்கள்

(விசுவமடு)

கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள ஊரியான்கிராமத்தில் 2006 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு கரையோர கிராம அபிவிருத்தித்திட்டத்தில்,

பொருண்மிய மதியுரையகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நெஸ்டெப திட்டத்தின்கீழ் ஊரியான் கிராமத்தில் நான்கு மிக அவசரமான வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டு இவ்வேலைத்திட்டங்கள் இவ்வாண்டில் மேற் கொள்ளப்படவுள்ளது. மீனவர் ஓய்வுமண்டபம் ஆறு இலட்சம் ரூபா செலவிலும், தொழில் பயிற்சி நிலையம் 18 இலட்சம் ரூபா செலவிலும், பால் சேகரிப் புமையம் ஒன்பது இலட்சம் ரூபா செல்விலும், பொக்கன்குளம் கழிவுவாய்க் காலுக்கான பாலம் நான்கு இலட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்படவிருப் பதாகபொருண்மியமதியுரையகத்தினரால்தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி வழங்க ஏற்பாடு

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் கிளிநொச்சி, கணேசபுரம் கிராமத்தில் 113 நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுப்பூசி மருந்து அண்மையில் ஏற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சி திருநகர் கிராமத்திலும் 77 நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது. நாய்களுக்கான விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றியதும் கரைச்சிப்பிரதேச சபையினரால் தடுப்பூசி மருந்து ஏற்றியதற்கான அடையாள இலக்கத்தகடு வழங்கப்பட்டு வருகின்றது.

நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்பட்ட அடையாளத்தகடு இல்லாத நாய் கள் பிரதேசசபையினரால் பிடித்து அழிக்கப்பட்டும் வருகின்றன. நாய் களுக்கான விசர் நோய்த்தடுப்பூசி மருந்தை நாய் வளர்ப்பாளர்கள் உரிய இடங்களில் நாய்களுக்கு ஏற்றி விசர்நோய் வராமல் பாதுகாக்கவேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றிய அடையாளத்தகடு நாய்களுக்குக் கட்டி இருக்காவிடில் தகடு இல்லாத நாய்கள் பிடித்து அழிக்கப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (46)

# இரணைமடு குள புனரமைப்பிற்காக சிறுபோக நெற்செய்கையை விரைவுபடுத்துக!

## -கிளி.மாவட்ட அரச அதிபர் வேண்டுகை


(விசுவமடு)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளத்தின் கீழ் 2006 சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் இம்முறை சிறுபோகப் பயிர்ச்செய்கையை விரைவுபடுத்தி காலத்தை தாமதிக் காது மேற்கொள்ளு மாறு கிளி அரசஅதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சிறுபோக நெற்செய்கையை காலம் தாழ்த்தாது இம்முறை குறித்த காலத் தில் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளதோடு இரணை மடுக்குளம் புனரமைப்பிற்கு 1000 மில்லியன் ரூபா பண ஒதுக்கீடு இருந்த போதும் தற்போது 300 மில்லியன் ரூபா பணமே ஒதுக்கீடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சிறுபோக நெற்செய்கையை காலம்தாழ்த்தாது மேற் கொண்டு வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் இரணை மடுக்குளத்தில் தண்ணீரைக் குறைத்து குள வேலைகளை மேற் கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்த தோடு கிடைக்கப்பட்ட இந்த நிதியைப் பயன்படுத்தி விரைவாக குளவேலையை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கான ஆய்வுகள் யாவும் முடிவுற்றநிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், குளத்தில் இருக்கும் தண்ணீ ரைக் குறைத்து குளப்புனர மைப்பு வேலை களை விரைவாக மேற்கொள் வதற்காகவே விரைவாக பயிர்ச்செய்கை மேற் கொள்ள வேண்டுமென்பதற்காக பயிர்ச்செய்கைக் கூட்டத்தினைக்கூட்டி கால அட்டவணையைத் தீர்மானிப்பதற்கு நாள் எடுக்கும் என்பதால் பத்திரிகை மூலம் விவசாயிகளுக்கு பயிர்ச்செய் கைக்கான காலஅட்டவணைப் அறிவித்துள்ள தாகவும் தெரிவித்ததோடு பயிர்ச்செய்கைக் கூட்டத்தினை கூட்டுவதற்கும் ஆயத்தமாக இருப்ப தாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (46)

# தார் பூசப்பட்ட பிரதான வீதிகள் புனரமைக்கப்படாமையால் ஆபத்து



படம்:-வதனன்

(விசுவமடு)

கிளிநொச்சி,முல்லை மாவட்டங்களிலுள்ள தார் பூசப்பட்ட வீதிகள் புனரமைப்பு மேற்கொள்ளாததினால் பயணிகள் பெரும் அவலங் களைச் சந்தித்து வருகின் றார்கள்.

கிரவல் போட்டு தார் பூசப் பட்டுள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாததால் துவிச்சக்கர வண் டிகளிலும்-உந் துருளி களிலும்-பயணிப்போர் வீதிகளின் இரு மருங்கிலும் இருக்கும் உடைவுகளால் வாகனங்களுக்கு வழிவிட்டுச் செல்லும் போது வீழ்வதும் சக்கரங்கள் காற்றுப் போவதோடு பல அசௌகரியங் களையும் சந்தித்து வருகின்ற னர்.

பரந்தனில் இருந்து புதுக்குடி யிருப்பு வரையான பிரதான வீதி இரு மருங்கும் இவ்வாறு உடைந்துள்ளதால் நாளாந்தம் வீதிவிபத்துக்களும் இடம் பெற்று வருகின்றது.

இது விடயத்தில் உரியவர் கள் கனவமெடுக்க வேண்டு மென மக்கள் தெரிவித்துள்ள னர். (46)

# கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகளின் அவலம் தீர்க்க உதவக் கோரல்

## –மாதாந்த சுகாதார குழுக் கூட்டத்தில் ஆராய்வு

(கண்டாவளை)

குஞ்சுப்பரந்தன் மற்றும் சிவன்சோலை கிராம கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தை கள் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகளை தீர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குஞ்சுப்பரந்தன் செஞ்சிலுவைச்சங்க முதலு தவிச்சிகிச்சை நிலையத்தில் மாதாந்த சுகா தாரக்குழுக்கூட்டம் கடந்த 22 ஆம்திகதி மு.ப 10.00 மணிக்கு தலைவர் வே. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.


இச்சுகாதாரக்குழுவில் பெரியபரந்தன் குஞ்சுப்பரந்தன், நீவில், சிவன்சோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அங்கம் வகித்து தமது பகுதி சுகாதார மேம்பாடு தொடர் பாக ஆராய்ந்தனர்.

இதன்போது சிவன்சோலை கிராமத்தில் தாய்சேய் சிகிச்சைகள் கடந்த ஆவணி மாதத்திலிருந்து நிறுத்தப் பட்டதால் உருத்திர புரம் தாய்சேய் சிகிச்சை நிலையத்திற்கு வரவேண்டிய நிலையுள்ள தாகவும் குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு மேலும் சில கிலோமீற்றர் தூரம் சென்று எட்டாம் ஆம் வாய்க்கால் அரச மத்திய மருந்தகத்திற்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் குஞ்சுப்பரந்தன் பகுதி கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் கூட 9 கிலோ மீற்றர் தூரம் சென்று அரசமத்திய மருந்தகத்திலேயே தடுப்பூசி போட வேண்டியுள்ளனர்.

இவர்களுக் கான தடுப்பூசிகளை உருத்திரபுரம் தாய்சேய் சிகிச்சை நிலையத்தில் ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்து தர மாவட்ட வைத்தியதிகாரியை வேண்டுவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மேற்படி கிராமங்களுக்கு குடும்ப நல உத்தி யோகஸ்தர்கள் வீட்டுத்தரிசிப்புக் குறித்தும் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்துக்கு செஞ்சிலுவைச்சங்க திட்ட இணைப்பாளர் கே.றஜனிகாந் செஞ்சிலுவைச் சங்க பணியாளர்கள் கலந்துகொண்டனர். (14)

# பூநகரியில் 20 பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்



ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் பூநகரி கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு படகு இயந்திரம் மற்றும் உபகரணங்களாக 80 இலட்சம ரூபா பெறுமதியான பொருட்கள் சமாசத்தினால் கையளிப்பு செய்யப்பட்டுள் ளன. மேற்படி படகு கையளிப்பு நிகழ்வு சமாசத்தலை வரின் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்விற்கு ஒக்ஸ்பாம் நிறுவன இணைப்பாளர் தேவா, பூநகரிப் பிரதேச செயலர் ஸ்ரீஸ்கந்தகுமார், சமாச மேலாளர் மோகன், கடல்வள அதிகாரி மெரின்டா பூநகரி பிரதேச பங்குத் தந்தை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கிராம மருத்துவ சேவையில் 841 பேர் பயனடைவு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய எழுச்சிப்பேரவையின் வேண்டுகோளுக்கு அமைய தமிழீழ சுகாதார சேவைகளின் மன்னார் மாவட்டப்பணிமனையினரின் ஒழுங்கமைப்பில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், மன்னார் மாகாண சுகாதாரசேவை கள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை, சுகாதார வைத்திய அதி காரி பணிமனை, மன்னார் சுதேச மருத்துவப்பாதுகாப்புச் சபை, சனத்தொகை சேவைகள் லங்கா நிறுவனம் ஆகியன இணைந்து தட்சனாமருதமடுப் பாடசாலையில் அருகிலுள்ள கிராமமக்களுக்கான மருத்துவசேவையினை இம்மாதம் 20ஆம், 21 ஆம் திகதிகளில் நடாத்தியுள்ளன.

இதில் சுதேச மருத்துவசிகிச்சை, பற்சிகிச்சை, பொது மருத்துவம் என்பனவற்றுடன் வைத்திய ஆலோசனைக் குறிப்புக்களும், விழிப்புணர்வுக்கருத்தூட்டல்களும் நடை பெற்றன. இதில் 841 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். (கு)

# அரச திட்டங்கள் ஊடாக வழங்கப்பட்ட காணிகளை ஆட்சிப்படுத்துவோர் கவனத்திற்கு

- அரசினால் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் சில நீண்ட காலம் உரிமையாளர்களினால் பராமரிக்கப்படாமல் அவர்களது உறவினர்கள்/ உறவினர் அல்லாதோரால் ஆட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்விதமான காணிகளை விற்றல், வாங்கல் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி விற்கப்பட்டிருப்பின் காணி மீள கைகேயற்கப்படும். இதற்கான நட்டஈடு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள காணி தொடர்பில் யாராவது நீண்டகாலம்/ குறுகியகாலம் என ஆட்சிப்படுத்தி வைத்திருப்பின் அக்காணி தொடர்பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை யுடன் தாமதமின்றி தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

-தமிழீழநிர்வாகசேவை.

# உயர்பாதுகாப்பு வலயத்துள் உள்ள வீடுகளை விடுவிக்க முடியாது

-யாழ்.நகர இராணுவக்கட்டளைத்தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.கொழும்புத்துறை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் வீடுகளை விடுவிக்க முடியாது என்று யாழ்.நகர இராணுவக்கட்டளைத் தலைமையகம் உறுதியாகத் தெரிவித்துள்ளது.**

யாழ்.கொழும்புத்துறை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்களது வீடுகளுள்ளன. இவற்றுள் 118 வீடுகள் சேதமடையாது மக்கள் குடியேறி வாழக்கூடிய நிலையிலுள்ளன. ஏனைய வீடுகள் சேதமடைந்து விட்டன.

இந்நிலையில் மேற்படி கொழும்புத்துறைப் பிரதேசமானது முற்று முழுதாகக் கடற்றொழில் குடும்பங்களைக் கொண்ட கிராமம் என்பதால் அப்பிரதேசத்திலுள்ள வீடுகளில் சென்று பொதுமக்களைக் குடியேற அனுமதிக்குமாறு வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் கோரியிருந்தது.

எனினும் பாதுகாப்புக்காரணங்களைச் சுட்டிக்காட்டி கொழும்புத்துறை பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் வீடுகளில் பொதுமக்கள் குடியேறுவதை அனுமதிக்கமுடியாது என அடியோடு மறுத்துள்ள யாழ்நகர இராணுவ கட்டளைத்தளபதி மேற்படி பாதுகாப்பு வலயத்துள் சேதமடையாந்திருக்கும் 118 வீடுகளின் உரிமையாளர்களுக்கு வாடகைப் பணம் செலுத்தவும் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று கடற்றொழிலாளர் சம்மேளனம் கூறியுள்ளது. (33)

# அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தொகுதி "ஆ" தரம் I "ஆ" பிரிவு அஞ்சல்சேவை உத்தியோகஸ்தர் பதவிக்கு ஆட்களைச்சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை-2006 இற்கான விண்ணப்பமும் அறிவுறுத்தல்களும் 2006.03.10 வெள்ளிக்கிழமை 1436 ஆம் இலக்க அரச வர்த்தமானி பத்திரிகையின் பகுதி I, தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ளது. வேலையற்றிருக்கும் க.பொ.த (சா/த) க.பொ.த (உ/த) சித்தியடைந்த 18-45 வயதுடைய இருபாலரும் (தபாலகங்கள் தோறுமுள்ள) வர்த்தமானி பத்திரிகையைப் பார்வையிட்டு அதிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பங்களைத் தயார் செய்து எதிவரும் 12 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அதில் குறித்த முகவரிக்கு அனுப்பி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# உடல் சோதனையின் போது படையினர் அடாவடி

முகாமலை இராணுவச் சோதனைச் சாவடியில் உடல் சோதனையில் ஈடுபடும் படையினர் உடல் சோதனையின் போது பொது மக்களை நெஞ்சிலும் வயிற்றிலும் கைகளால் ஓங்கித்தாக்கி சோதனை என்ற பெயரால் அடாவடிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். வயது வித்தியாசம் இன்றி வயோதிபர்களையும், இளம் வயதினரையும் கடுமையான வார்த்தைகளால் பேசி உடல் சோதனை இடம் பெறும் மறைப்புச் செய்யப்பட்ட பகுதியில் வைத்து சிங்களப்படையினர் தாக்கி வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# படையினரின் வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை

-கலாச்சாரப் பேரவை எச்சரிக்கை

படையினரால் படைமுகாம்களில் வர்த்தக நிலையம் என்ற போர்வையில் யாழ்.குடாநாட்டில் நடத்தப்பட்டுவரும் கடைகளில் பொருட்களை வாங்குவோர், வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலாச்சாரப் பேரவை கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது. வியாபாரம் என்ற போர்வையில் பொதுமக்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் புலனாய்வுத்தளமாக இருக்கும் இக்கடைகளில் பொருட்களை வாங்கச் செல்வோர் மீதும், வியாபாரத் தொடர்புகளை வைத்திருப்போர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்டோர் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் கலாச்சாரப் பேரவை தெரிவித்துள்ளது. (28)

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களின் சுயதொழில் ஊக்குவிப்புக்கு நிதியுதவி


(முல்லை)

சுனாமி மீளமைப்புத்திட்டத்தின் கீழ் ஜேர்மன் அரசின் நிதியுதவியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கள்ளப்பாடு கிராம மாதர் அபிவிருத்தி சங்கத்தினரின் நலன் கருதி (ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில்) 1.7 மில்லியன் ரூபா சுயதொழில் கடன் வழங்குவதற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி அன்று கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் கள்ளப்பாடு வடக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தலைவி திருமதி வசந்தி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துரைகளை கிராமிய அபிவிருத்தி உத்தியோ கத்தர் வை.ஜெயக்குமார், யு.என்.டி.பி முல்லை. மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் வி.நவநீதன் யு.என்.டி.பி நிகழ்ச்சித்திட்ட பொறியியலாளர் சுசிந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தக்கடன் எவ்வாறு பெற வேண்டும் என்ற விளக்கங்களையும் முதல்கட்டமாக நிதி தற்போது தரப்பட்டுள்ளது எனவும் இதனைக் கடனாகப் பெறுவோர் சுயதொழிலினை மேற்கொள்ள வேண டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.(20)

# பொதுக்கிணறு சுத்திகரிக்கப்படாததினால் பாவனையாளர்கள் விசனம் தெரிவிப்பு



(அலுவலக செய்தியாளர்)

பொதுக்கிணறு சுத்திகரிக்கப்படாததினால் வர்த்தகர்கள், பாவனையாளர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

பரந்தன் சந்தியிலுள்ள பொதுக் கிணற்று நீர் அசுத்த நீராக மாறியதால் மக்கள் அந்நீரைப் பயன்படுத்த முடியாமலுள்ளது.

இவற்றால் வர்த்தக நிலையங்கள், உணவு விடுதிகள், பொதுமக்கள் எனப்பலரும் குடிநீரைப்பெற முடியாமலுள்ளது. இதைவிட இப்பகுதிகளுக்கு குழாய் நீர் விநியோகம் செய்யப்பட்டும் ஒரு சிலரே அவற்றைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். ஏனையோர் இக்கிணற்று நீரினையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இதைவிட பேருந்து தரிப்பு நிலையத்தின் அண்மையாகவே இக்கிணறு அமைந்துள்ளது. பேருந்திற்காக காத்திருப்பவர்கள் தாகசாந்திக்காக கிணற்று நீர் அசுத்தமாக இருப்பதால் அருகில் உள்ள உணவு விடுதிகளையே நாடிச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் பொதுக் கிணற்று நீரை சுத்தப்படுத்தியோ அல்லது குழாய் நீர்வசதி முறையையாவது ஏற்படுத்தித் தரும்படி பாவனையாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (தீ,லோ)

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் குழாய் நீர் விநியோகத்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் குழாய் நீர் விநியோகம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்படித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் குளத்திலிருந்து பெறப்படும் நீர் சுத்திகரிக்கப்பட்டு குழாய்களினூடாக நீர் தாங்கிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாவனைக்கு நீர்விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

வியாபார, வர்த்தக நிலையங்கள் தனியார், நிறுவனங்கள் வீடுகள், பாடசாலைகள் என 40இற்கு மேற்பட்ட நீர் இணைப்புக்கள் வழங்கப்பட் டுள்ளன.

நீர் இணைப்புக்களை ஏற்படுத்த விரும்புபவர்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (தீ)

# சிறைக்காவலர் வெற்றிடங்கள் நிரப்புவதில் பாரிய முறைகேடு

யாழ்.சிறைச்சாலையின் சிறைக் காவலர் பதவி வெற்றிடங்களை நிரபுவதற்காக இடம்பெற்ற ஆட்சேர்ப்பில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான முறைகேடுகளுக்கு சமூக நலன் அபிவிருத்தி மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபாரிசுகள் மற்றும் செல்வாக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்.சிறைச்சாலையின் சிறைக் காவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான நேர்முகத்தேர்வும் நடத்தப்பட்டது. இந்த நேர்முகத்தேர்வில் 404 விண்ணப்பதாரிகள் தோற்றியிருந்தனர்.

இவ்வாறாக நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தோற்றியவர்களில் விண்ணப்பம் கோரலில் குறிப்பிடப்பட்டிருந்த படி சகலவிதமான தகைமைகளையும் கொண்டிருக்கும் பலர் சிறைக்காவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்படாமல் இருக்க, உடற்தகுதியோ, கல்வித்தகுதியோ இல்லாத பலர் இப்பதவிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவ்வாறு தகுதியற்றவர்கள் எவ்வாறு சிறைக்காவலர் பதவிக்குத் தெரிவாகினர் என்ற விடயத்தை ஆராய்ந்த சமயம் இவர்கள் ஈ.பி.டி.பி.யின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினதும் ஏனைய சில உயர் அதிகாரிகளதும் சிபார்சு அடிப்படையில் மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்ற விடயம் தெரிய வந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமது மன ஆதங்கங்களை வெளிப்படுத்தி யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ,யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி தியாகேந்திரன், யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் ஆகியோரது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதுடன் மகஜர்களையும் சமர்ப்பித்துள்ளனர். (33)

# தீவகப்பகுதி கொள்ளைச் சம்பவங்களுடன் சிறிலங்கா படையினருக்கு நெருங்கிய தொடர்பு

தீவுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் கொள்ளைச்சம்பவங்களில் படையினருக்கு நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக தீவக பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

படையினரின் பிரசன்னம் அதிகமுள்ள பகுதிகளில் வெளியார் நடமாட சாத்தியம் இல்லாத பகுதிகளில் படையினரே களவுகளில் ஈடுபடுவதுடன் சமூக விரோதிகளையும், தேசதுரோகிகளையும் படையினர் தம்முடன் சேர்த்துப் பொதுமக்களின் உடமைகளை, பணம், நகை முதலியவற்றையும் வீடுகளை உடைத்து அபகரித்து வருவதாகவும் மற்றும் கால்நடை, கோழிகள் முதலான வற்றையும் களவாடிச் செல்வதாகவும் பொதுமக்கள் மற்றும் தீவக பொது அமைப்பினர் தெரிவிக்கின்றனர். (28)

# சோனியாவின் பதவி விலகலுக்கு பின்னால்.....



இந்தியஅரசியலில் பூதாகரமான விவகாரமாக இருப்பது சோனியாகாந்தியின் பதவி விலகல் விவகாரமன்றி வேறில்லை எனலாம். "ஆதாயம்" தரும் பதவி விவகாரமே இப்போது இந்திய அரசியலை ஒரு கலக்குக்கலக்கிக் கொண்டிருக்கிறது. எல்லா மாநிலங்களும் இந்த விவகாரத்தால் ஆடிப்போய் இருக்கின்றன என்பதே பேருண்மையாகும் எனலாம்.

இந்த வகையில் லோக்சபா உறுப்பினர் பதவியிலிருந்து வரும் சோனியாகாந்தி தேசிய ஆலோசனை சபையின் தலைவராகவும், இருந்தும் வந்தார். இப்போது இந்த இரண்டு பதவிகளிலிருந்துமே விலகியுள்ளார்.

"வேலிக்கு வைத்தமுள் காலைப்பதம் பார்த்த கதையாகி" விட்டதாகவே காங்கிரஸ் தரப்பினர் ஏக்கப்பெரு மூச்சு விடுகின்றனர். ஏனெனில் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் இன்று விவகாரமாகி வில்லங்கங்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் களின் வாதம் விரிகின்றது. இதனையே காரணம் காட்டி அவர்கள் சோனியா பதவி விலகத் தேவையே இருக்கவில்லை என்றும் போராட்டம் நடத்துகின்றது.

ஆனால் எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாவின் தேசிய சனநாயகக்கூட்டணி சோனியா காந்தி பதவிவிலகியதை வரவேற்கின்றது. ஆனாலும் ஏதாவது அரசியல் தில்லுமுல்லு இருக்குமோ எனவும் பயப்படுகின்றது. அதனால் தான் சோனியா காந்தியின் பதவி விலகல் ஒரு நாடகம் என குற்றம் சாட்டுவதையும் அவதானிக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

அது மட்டுமன்றி சோனியா காந்திபோல் பிரதமர் மன்மோகன்சிங்கும் கூட பதவி விலக வேண்டுமென்று ஒற்றைக்காலில் நிற்கின்றது. ஆனாலும் பிரதமர் பதவி விலகலுக்குக் காரணத்தை அக்கட்சி கூற முன்வரவில்லை என்பதையும் காணலாம்.

இருந்த போதும் எதிர்க்கட்சியின் அடுத்த இலக்கு ஆட்சியைத் தாம் கைப்பற்றுவதே ஆகும். ஏனெனில் சோனியா காந்தி போல் ஏணைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இரண்டு பதவி வகிக்கின்றார்கள். அவர்களும் பதவி விலக வேண்டும் என்று இப்போது கோஷம் எழுப்புகின்றது.

இதனையே காரணம் காட்டி அவர்களும் பதவி விலகநேரிட்டால்........ காங்கிரஸ் கட்சியின் பெரும்பான்மை என்பது கேள்விக்குறியாகும் என எதிர்பார்க்கின்றது. தான் நினைப்பதைச் சாதிப்பதனால் மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்பது பாரதிய ஜனதாவின் திட்டமெனலாம்.



சோம்நாத் சட்டர்ஜி

இதனை மையமாக வைத்தே அக்கட்சி காய் நகர்த்தி வருகின்றது என்பதும் உண்மை தான்! மாறாக பாரதியஜனதாவின் இலக்கு அடையப்படக்கூடியதொன்றா.......... என்பது அரசியல் ஆய்வாளர்களின் வினா தான்!

இதேவேளை, இன்றைய நிலையில் சோனியா காந்தி தனது இரண்டு பதவிகளையும் இராஜினாமாச் செய்வதற்கு வலுவான காரணமாக இருந்தது. எதுவென நோக்கின்...........

சமாஜ்வாடி கட்சியின் ராஜ்யசபா உறுப்பினராகப் பதவி வகித்து வந்தவர் ஜெயாபட்சன். அத்தோடு உத்தரப்பிரதேச மாநில திரைப்பட வளர்ச்சிக்குழுவின் தலைவராகவும் பதவி வகித்தார். இதுவே விவகாரமாக்கப்பட்டது. இதனை வில்லங்கமாக்கியவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதன் மோகன் சுக்லா ஆவார் என்பதே குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

கடந்த 2004 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் உத்தரப்பிரதேசத்தில் போட்டியிட்டவர்தான் மதன் மோகன் சுக்லா. இவரை எதிர்த்து சமாஜ்வாடிக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவரே ஜெயாபட்சன்.

ஆனால் வேட்பு மனுவோடு சேர்த்து மதன் மோகன் சுக்லா கல்விச்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தவறியதால் அவரது வேட்பு மனுவைத் தேர்தல் ஆணையகம் நிராகரித்து விடவே வெற்றிக்கனி ஜெயாபட்சன் வசமாகிவிட்டது.

இதனைப்பொறுக்க முடியாத மதன்மோகன் சுக்லா தருணம் பார்த்திருந்து ஜெயாபட்சனின் பதவிக்கு வேட்டு வைத்துவிட்டாரெனலாம். ஜெயாபட்சன் இரண்டு பதவிகளில் இருப்பதாகவும் அதில் ஒன்று ஆதாயம் பெறும் பதவியெனவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து காங்கிரஸிடம் முறையிட்டார்.

காங்கிரஸ் கட்சியான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சித்தலைவியான சோனியா காந்தியும் இந்த விவகாரத்தைச் சரியென ஆமோதித்து அப்துல் கலாமிடம் பதவியைப் பறிக்க சிபாரிசு அளித்துள்ளார் எனவும் அதனையடுத்து சனாதிபதி ஒப்புதல் அளித்து நடவடிக்கையினை முடுக்கி விடவே ஜெயாபட்சன் பதவியை இழந்தார் என்பது கடந்தவார முற்பகுதிச்சம்பவங்கள்.

இதனையடுத்து சமாஜ்வாடிக்கட்சியும், பாரதிய ஜனதாக்கட்சியும் ஒன்றாகக் கைகோர்த்துக்கொண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சியினரின் பதவிகளை "கண்ணில் விளக்கெண்ணை விட்டுத்" தேடாத குறையாகத் தேடின.

அதன் பலாபலனாகவே தான் சோனியா காந்தி இரண்டு பதவிகள் வகிப்பதாகவும் அவை மத்திய அமைச்சரவை அமைச்சர் அந்தஸ்துக்கு நிகரான தேசிய ஆலோசனைக்குழுத்தலைவர் பதவியை சோனியா காந்தி வகிப்பதாகக் குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்தன.

இதனால் உடனடியாக சோனியா காந்தியின் லோக்சபா உறுப்பினர் பதவியைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று அப்துல் கலாமிடம் இருகட்சிகளும் மனு அளித்தன. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச பொதுச் செயற்திட்டத்தின் எந்தவொரு இடத்திலும் "தேசிய ஆலோசனைக் குழுத் தலைவர் பதவி என்பது இலாபம் தரும் அரசு பதவி அல்ல." எனக் குறிப்பிடப்படவே இல்லையென சட்டக் கருத்தாகப் பாரதிய ஜனதா குழுவினர் சனாதிபதியிடம் குழுவாகச் சென்று முறையிட்டனர்.



காங்கிரஸ் ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்

இதனையடுத்து 16 பாராளுமன்ற உறுப்பினர்களது குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சனாதிபதி அப்துல் கலாம் தேர்தல் ஆணையத்திடம் பரிசீலனை செய்யுமாறு அனுப்பிவைத்துள்ளார் எனும் தகவல் வெளியானதையடுத்தே பல அதிரடி சம்வங்கள் அரங்கேறின.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, கம்யூனிஸ்ட்டுக்களைச் சேர்ந்த குருதாஸ்கமாத், கபிலாவாத் வாயன், கரன்சிங் போன்றோர் உடனடியாகத் தமது பதவிகளைத் துறக்கும் நிலை ஏற்பட்டது. இன்னும் சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி உட்பட 13 பேர் பதவிகளை இழக்க நேரிடும் என ஆரூடம் பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் சோம்நாத் சட்டர்ஜி எவ்விதமான காரணம் கொண்டும் தாம் பதவியை இராஜிணாமாச் செய்யமாட்டேன் என கூறிவருகின்றார். அதே போல் இடது சாரிகளும் தமது 11 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதாயம் தரும் பதவிகளிலில்லை. அதனால் பதவியை இழக்க நேரிடாது என விளக்கம் கூறி வருகின்றது.

இத்தகைய நிலையில் மேலும் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் சனாதிபதியிடம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் சனாதிபதித் தேர்தல் ஆணையத்திடம் இன்னும் பரிசீலனைக்கு அனுப்பவில்லையெனவும் கூறப்படுகின்றது.

ஆக 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பதவிகள் வகித்து வருவதாகவும் அதில் ஒன்று ஆதாயம் தரும் பதவியெனவும் இருப்பதனால் அவ்வாறு பதவி வகிக்கும் 40 பேரும்நெருக்கடிக்குள்ளாகியுள்ளன எனலாம்.

ஏனெனில் சோனியா காந்தி உட்பட நால்வர் ஏற்கனவே பதவி விலகி விட்ட நிலையில் தமது பதவியைத்தேர்தல் ஆணையகம் பிடுங்கிக் கொள்ளுமா.........எனும் குளிர்காய்ச்சலில் ஏணைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதைத்தான் எதிர்பார்க்க முடியும் எனலாம். இதனால் தான் இந்திய அரசியல் சூடாக இருக்கின்றதெனப் பார்க்கப் படுகின்றது. இதனையடுத்து சூடு தணியும் போது எத்தனை பேரது பதவிகள் காணாமல் போகும் எனும் கேள்வியும் இருக்கின்றது.



பா.ஜ.வி.னர்

இருந்த போதும் 1959 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமொன்றினைக் காங்கிரஸ் கட்சி கையில் எடுப்பதை எதிர்க்கட்சிகள் நிராகரித்து கோஷமிட்டு இரு அவைகளிலும் அமளியை ஏற்படுத்தி புற நடப்புச் செய்து இரு அவைகளையும் அல்லோலப்படுத்தியதையடுத்தே காங்கிரஸ் அந்த சட்டமூலத்திருத்தத்தை கைவிட்டதாகத் தெரியவருகின்றது. அதாவது பாராளுமன்ற சட்டப்படி 1959 இல் பதவி நீக்கம் செய்வதைத் தடுக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனில் திருத்தம் மேற்கொண்டு அவசரச்சட்டமாகக் கொண்டு வந்து சோனியா காந்தி பதவி விலகியதைத் தடுக்க முற்பட்ட காங்கிரசை எதிர்க்கட்சிகள், இடது சாரிகள் தடுத்து விட்டதாகவும் இதனையடுத்தே அவசரச்சட்டம் கொண்டுவரமுடியாமல் காங்கிரஸ் திணறி வருவதாகவும் கூடப் பேசப்படுகின்றது.

ஆனாலும் பாராளுமன்றம் எதிர்காலத்தில் கூடும்போது சட்டமொன்றைக் கொண்டுவருவதில் தான் காங்கிரஸ் கட்சி தீவிரம் காட்டி வருகின்றது எனலாம். அத்துடன் ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாரதிய ஜனதா ஆட்சியே நடந்து வருகின்றது. அங்குள்ள சட்டசபை உறுப்பினர்கள் இதே போல் ஆதாயம் பெறும் பதவியில் இருப்பதாக 13 பேர் மீது காங்கிரஸ் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது. ஜார்க்கண்ட் ஆளுநரும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மனுவைச்சனாதிபதியிடம் அளித்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக.......... மொத்தம் ஆளும் கட்சியும் சரி........ எதிர்க்கட்சியும் சரி....... கண்ணுக்குக் கண்......... எனும் முறையில் தான் இறங்கியிருக்கின்றன என அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை தேர்தல் ஆணையகம் தான் சோனியாகாந்தி சோம்நாத் சட்டர்ஜி உட்பட்டவர்கள் ஆதாயம் தேடும் பதவிகளை வகிக்கின்றார்களா......... என விசாரணையும் பரிசீலனையும் செய்யவுள்ளது. இதனைத் தேர்தல் ஆணையாளர் டாண்டனே கூறியிருக்கின்றார்.

அதாவது முழுமையான விசாரணை செய்த பின்னரே தான் சோனியாகாந்தி ஆதாயம் பெறும் பதவியில் தான் இருந்தாரா........ இல்லையா........ என்பதைக் கூற முடியுமெனக் கூறுகின்றார்.

இதேவேளை சோனியா காந்தியின் பதவி விலகல், மக்கள் மனதில் இன்னும் உறுதியாக இடம்பிடிப்பதற்கே...... என்று கூடப் பேசப்படுகின்றது. ஏற்கனவே பதவியை விட்டுக் கொடுத்து மன்மோகன்சிங்கைப் பிரதமராக்கி மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் என்பது யாவரும் அறிந்ததொன்றே.

இத்தகைய நிலையில்தான் சோனியா காந்தி பதவி விலகி மக்களைக் கவரப் போகின்றார். (?) எனும் ஐயமும் கூட இல்லாமலில்லை. எது எப்படியோ.....சோனியா காந்தியின் பதவி விலகல் நல்லதற்கா......கெட்டதற்கா........ என்பதே இன்றைய வினாவாக உள்ளது எனலாம். ஏனெனில் பாரதிய ஜனதாவோ ஆட்சியைக் கைப்பற்ற முனைப்பாக இருக்கையில் தேர்தல் ஆணையகத்தின் பதிலில்தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் எதிர்காலம் இருப்பதாகவே கூற வேண்டியுள்ளது என்றால் மிகையில்லையெனலாம்.

**அ.கலைவாணி**




# சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும்...

அவுஸ்திரேலியாவின் மெல் பேர்ன் அரங்கில் பொது நலவாய நாடுகளின் மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. பல நாட்டுவீர வீராங்கனைகள் அவ்வந்நாடுகளுக்காக தங்கம் முதல் வெண்கலம் வரையான பதக்கங்களை பெற்றுக்கொடுத்து புகழீட்டியுள்ளனர். இது இவ் விளையாட்டுத்தொடரில் சிறந்த அம்சமாகக்கருதப்பட்டாலும் அதனையும் விஞ்சு கின்றவகையில் ஊனமுற்றோருக்கான போட்டிகளில் பங்கேற்று பதக்கங் களை வென்றோரின் திறன் யாவரையும் கவர்ந்துள்ளதென்றால் மிகையாகாது.

அந்த வகையில் ஆபிரிக்காவைச்சேர்ந்த நீச்சல் வீராங்கனையான நட்டாலி டியுடொய்ட் ஊனமுற்றோருக்கான நீச்சல் போட்டியில் சாதனை படைத்துள்ளார். இவர் தனது 14ஆவது வயதில் சர்வதேச போட்டிகளில் பிர வேசித்தார்.அது 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற பொது நலவாய நாடுகள் போட்டியாகும். அப்போது அவர் சுகதேகியாகவே இருந் தார். ஆயினும் 2001ஆம் ஆண்டுஊனமுற்றோருக்கான போட்டியில் பங்கேற் கும் நிலையேற்பட்டது. அதே ஆண்டு அவர் நீச்சல் பயிற்சியை முடித்து விட்டு பாடசாலைக்கு ஸ்கூட்டரில் செல்லும்போது முன்னே வந்த கார் மோதியதில் அவர் இடது காலை இழந்தார் எனினும் காயத்தினின்றும் குணமடைந்து அதே ஆண்டு சரியாக நடக்க முடியாத நிலையிலும் கூட 2002 ஆம் ஆண்டு மஞ்செஸ்டரில் நடைபெற்ற பொது நலவாய நாடுகள் போட்டியில் கலந்து கொள்ள அவர் விரும்பினார். அப்போது 18வயதான அவர் 50 மீற்றர் ஊனமுற்றோருக் கான நீச்சல் போட்டியிலும் 150 மீற்றர் நீச்சல் போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றியீட்டினார். அத் துடன் 800 மீற்றர் நீச்சல் போட்டி யில் ஊனமுற்றோர் அல்லாதோர் பங்கு பற்றும் போட்டியில் இறுதிப் போட்டி வரை முன்னேறினார். என்பது குறிப்பிடத்தக்கது.



அப்போட்டித்தொடரின் இறுதியில் அவருக்கு "டேவிட் டிக்ஷன்" விருது வழங்கிச்சிறப்பான வீராங் கனையாக அறிவிக்கப்பட்டார்.

2003 ஆம் ஆண்டு போட்டியில் சாதாரண போட்டியாளர்களுடன் இவர் அகில ஆபிரிக்கா நாடுகள் பங்கேற்கும் 800 மீற்றரில் தங்கப்பதக்கம் வென்றதுடன் அவ்ரோ ஆசியா போட்டித்தொடரில் 400 மீற்றரில் வெண்கலப்பதக்கமும்800மீற்றரில் வெள்ளிப்பதக்கமும் பெற்றார்.

2004 ஆம் ஆண்டு எதென்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியை மயிரிழையில் தவறவிட்டபோதும் அதே அரங்கில் நடைபெற்ற ஊனமுற்றோருக்கான போட்டிகளில் ஐந்து தங்கப்பதக் கங்களையும் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றார்.

இவரது அடுத்த இலக்கு 2008ஆம் ஆண்டு சீனாவிலும் 2012 ஆம் ஆண்டு லண்டனிலும் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதாகும். தற்போது அவர் விஞ்ஞான சிறப்பு பட்டதாரிக்காக பயின்று வருவதுடன் தென்னாபிரிக்காவின் அனைத்து வீரர்களின் வரிசையில் 48ஆவது இடத்தைப்பெற்றுள்ளார். தற்போது 22வயதைக் கடந்துள்ள இவரின் தாயகம் தென்னாபிரிக்காவாகும்.

வடிவேல்

# மேற்கிந்தியத்தீவில் கிரிக்கெட் உயிர்வாழுமா?

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி குறித்த எதிர்காலம் பெரும் கேள்வியாக உள்ளது.

இதற்கு மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை விரைந்து நடவ டிக்கை எடுக்க வேண்டிய தேவைக் குத் தள்ளப்பட்டுள்ளதுடன் அதனை விரைந்து மேற்கொள்ளுமா என்ற கேள்வி எழும் ஒன்றாகவே உள்ளது.

கடந்த இரு தசாப்த காலமாக அவ்வணி அடைந்துவரும் தோல் வியே இதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

அதாவது, 1983ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொட ரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வி அடைந்தது. அத் தோல்வியின் நீட்சி தற்போது தொடர் கதையாகி வருகின்றதாகவே இவ் வாறு சிந்திக்கத்தோன்றுகின்றது.




கிரிக்கெட்டில் முடிசூடா மன்னர்களாக வலம் வந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி 1983ஆம் ஆண்டு சற்றுத் தடுமாறத் தொடங்கியது எனலாம்.

அதனைத் தொடர்ந்து அதன் தடுமாற்றம் மென்மேலும் அதிகரித்துச் செல்லும் ஒன்றாகவே இருந்து வருகின்றது.

இரண்டு முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பெருமைக்குரிய நாடு எதிர்வரும் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரை நடாத்தவுள்ள நாடு என பெருமை கொள்ளப்போகும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அக் கௌரவத்திற்கு ஏற்றவகையிலும், அந்நாட்டு ரசிகர்களைத் திருப்திப் படுத்தும் அளவிற்கும் நடந்து கொள் ளுமா என்பதே தற்போதைய எதிர்பார்ப்பு.

அதாவது, சர்வதேச கிரிக்கெட் சபையால் எதிர்வரும் உலகக் கிண் ணத்தை நடாத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் தங்கள் அணியை உலகக் கிண்ணப் போட்டிகளில் எதிரணிகளுக்குச் சவாலாக ஆடக்கூடிய அணி ஒன்றை உருவாக்க முற்பட்டு நிற்கின்றதா? என கேலி செய்யும் வகையில் கேள்வி எழுப்புகின்றனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்த நியூசிலாந்துடனான ஒரு நாள் போட் டித் தொடர் மற்றும் டெஸ்ட் போட்டித் தொடர் என்பனவற்றில் படுமோசமாகத் தோற்றதுடன் அதன் பிடியிலிருந்து மீள்வதற்கான அறிகுறி என்பது எள்ளளவேனும் இல்லாத அணி யாகவே காட்சி தருகின்றது என கிரிக்கெட் ஆய்வாளர்கள் கவலை தெரி விக்கும் அதேவேளை, இவ்வாறான மோசமான பெறுபேறுகளைக் கொண் டுள்ள ஒரு நாட்டிற்கு எவ்வாறு உலகக் கிண்ணப் போட்டித் தொடரை நடாத்துவதற்கான அங்கீகாரத்தை சர்வதேச கிரிக்கெட் சபை வழங்கக் காரணம் என்ன? என கிண்டலும் செய்கின்றனர்.

அத்துடன், சர்வதேச கிரிக்கெட் சபையால் நடாத்தப்படும் மினி உல கக் கிண்ணப் போட்டித் தொடரில் இம்முறை பங்கு பற்றும் தகுதியைப் பெறுவதற்குக்கூட சிறிய நாடுகள் எனக் கருதப்படும் கென்யா, பங்களா தேஷ் போன்ற நாடுகளுடன் போரா டியே வரவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமையும் அதன் அவல நிலைக்கு சிறந்ததொரு எடுத் துக்காட்டாகும் எனவும் தெரிவிக்கின் றனர்.

இவைகளை கருத்தில் கொண்டு மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை மிக வேகமாக அதன் நடவடிக் கையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு அதிரடி முடிவுகளை மேற்கொள்ளும் ஒரு நிலையை விரைந்து மேற்கொள்ளும் பட்சத்தி லேயே அதன் மீது எழுந்திருக்கும் விமர்சனத்திற்கும், அதன் கிரிக்கெட் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கத் தக்கதாக இருக்கும்.

அத்துடன் எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டித் தொடர் நடாத் தும் உரிமையை சர்வதேச கிரிக் கெட் சபையால் வழங்கியமைக்கும் மதிப்பளிப்பதாக இருக்கும்.

எனவே, இதை உணர்ந்து மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை தங்கள் அணியை தயார்ப் படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் அதை விரைந்து மேற்கொள்ளுதலே பொருத்தப்பாடுடையதாக இருக்கும்.

பூ. சுபானந்


# டெஸ்ட் தொடர்களில் சரிவை நோக்கி இந்தியா!

இங்கிலாந்து அணியுடனான மூன் றாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த தன் மூலம் இந்திய அணியின் ஆதிக்கம் டெஸ்ட் போட்டிகளில் ஆட்டம்கண்டு வருகின் றதோ என எண்ணத்தோன்றுகின்றது.


பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரினை இழந்தநிலையில் தனது சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் தொடரிலாவது வெற்றிபெற்று தமது திறமையினை வெளிப் படுத்துவார்களென எதிர்பார்த்திருந்த வேளை யில் மும்பையில் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் 100 ஓட்டங்களிற்குள் ஆட்டமிழந்து தோல்வி யடைந்ததுடன் தொடரினை வெற்றி கொள்ள கிடைத்த சந்தர்ப்பத்தினையும் நழுவவிட்டனர்.

சொந்த மண்ணில் தம்மை எந்த அணி யும் இலகுவில் வெற்றிகொள்ள முடியாதென தம் பலத்தில் நம்பிக்கையுடன் இருந்த இந்திய அணிக்கு இத்தோல்வியானது பெரும் பின்னடைவாக கருதப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை முடிவடைந்த 3 ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற தன் மூலம் தொடரினை சமநிலையில் முடித்து இந்திய அணியுடன் வெற்றிக்கிண்ணத்தினை பகிர்ந்து கொண்டாலும் தற்போதைய இந்திய அணியுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து அணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.



ஏனெனில் இங்கிலாந்து அணி இந்தியா வரும்போது பலமான நிலையிலேயே இருந்தது. ஆனால் அணித்தலைவர் மைக்கல் வோகன் உட்பட அணியின் முக்கிய வீரர்கள் பயிற்சியின்போது காயத்திற்குள்ளாகியும் சொந்தக்காரணங்களிற்காகவும் தொடரிலிருந்து விலகிய நெருக்கடி நிலையில் பெரும்பாலும் இந்திய மைதானங்களிற்கு அறிமுகமில்லாத புதிய வீரர்களுடன் ஒருபோதும் உபதலைவர் பதவிகூட வகிக்காத பிளின்டொப் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்று போட்டித் தொட ரினை எதிர்கொண்டார்.




பிளின்டொப் தலைமையிலான அணி இப் போட்டித்தொடரில் படுதோல்வி அடை யும் என்று போட்டித்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இக்கருத்துக்களையெல்லாம் முறிய டித்து பிளின்டொப் பந்து வீச்சு, துடுப்பாட்டம் என இரண்டிலும் சிறந்தமுறையில் செயற்பட்ட துடன் அணிக்கு வெற்றியினையும் தேடிக்கொடுத்துள்ளார்.

கடந்த 21 வருடங்களாக இங்கிலாந்து அணியை வழிநடத்திய தலைவர்களினால் இந்திய மண்ணில் தொடரினை வெற்றி கொள்ளவோ அன்றி சமநிலையில் முடிக்கவோ இயலாமல் இருந்த வேளை இளம் வீரர்களைக் கொண்ட அணியை வழிநடத்தி பிளின்டொப் தொடரினை சமநிலையில் முடித்து கறைபடிந்த வரலாற்றினை முடிவுக்கு கொண்டு வந்தார்.

இதேவேளை பிளின்டொப் தலைமை யிலான அணி இந்திய அணியுடனான இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றது தம்மை அச்சம் கொள்ள வைத்துள்ளதாகவும் அடுத்த ஆஷஸ் போட்டித்தொடரிலும் தமக்கு நெருக் கடியினைத் தருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான லாங்கர் தெரிவித்திருக்கும்கருத்தானது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியதாகும்.

அந்நிய மண்ணில் அதுவும் இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் பலவீன மான அணியென கருதப்பட்ட அணியினை சிறந்தமுறையில் வழிநடத்தி துடுப்பாட்டத்தில் பலவீனமாக இருந்தாலும் வேகப்பந்து வீச்சாளர் களைக் கொண்டு வெற்றி பெற்றுள்ளதுடன் பிளின்டொப் தலைமையிலான இவ் அணியுடன் சிரேஸ்ட வீரர்களும் இணைந்து கொள்ளு மிடத்து வேகப்பந்து வீச்சிற்கு சாதகமான ஆடு களங்களில் இன்னும் சிறப்பாக விளையாடி தமக்கு அச்சுறுத்தலாக விளங்குவார்கள் என் பதே லாங்கரை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இது இவ்வாறு இருக்க இதற்குமுன் ஜோன் ரைட் பயிற்சியாளராக இருந்த காலத் தில் இந்திய அணி ஒருநாள் ஆட்டத்தில் பலவீனமாக இருந்தாலும் டெஸ்ட் ஆட்டங் களில் வலுவானதாக இருந்ததுடன் உலக சாம்பியன் அவுஸ்திரேலிய அணிகூட நெருக் கடிகளின் மத்தியிலேயே சில வெற்றிகளை இந்திய அணிக்கெதிராகப் பெற்றுள்ளது. ஆசிய நாடுகளிலும் வெளிநாட்டு ஆடுகளங் களிலும் சிறப்பாக ஆடி வெற்றிகளைப பெற்றிருந்தமை மறுக்கமுடியாததாகும்.

தற்போதைய பயிற்சியாளர் கிரேக் சப் பலினது வழிநடத்தலில் ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி வலுவானதாக திகழ்ந்தாலும் டெஸ்ட் போட்டிகளில் பலவீனமாகிக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா அணியுடனான ஒருநாள் போட்டி களை இலகுவாக வெற்றி கொண்ட இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் நெருக்கடியின் மத்தியில் வெற்றி கொண்டமையும் பாகிஸ் தான் அணியுடனான ஒருநாள் போட்டியை வெற்றி கொண்ட வேளை டெஸ்ட் போட்டித் தொடரினை இழந்து நாடு திரும்பியமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியுடனான மூன் றாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த தன் மூலம் சொந்த மண்ணில் 21 வருட கால மாக இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை வெற்றிகொண்டு கட்டிக் காத்த பெருமையினை இன்று இந்திய அணி இழந்துநிற்கின்றது.

இவ்வாறு சப்பலின் வழிநடத்தலில் இன்று சொந்த மண்ணில்கூட டெஸ்ட் போட்டி களில் தமது ஆதிக்கத்தினை இழந்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. அணியில் புதுமை களைச் செய்வதாக அளவுக்கதிகமாக மாற்றங் களை ஏற்படுத்துவது ஒருசில போட்டிகளில் நல்ல முடிவுகளைத் தந்தாலும் அணியின் ஆரோக்கியத்திற்கு ஏற்புடையதல்ல. அள வுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் இதனை சப்பல் உணர்ந்து கொண் டால் சரி.

இரா. மயூதரன்

# இராஜதந்திரத்தில் அனுபவ முதிர்ச்சி பெறவேண்டிய தேவையுள்ளது

*- முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்*

(கொழும்பு)

**இராஜதந்திரத்தில் மேலும் அனுபவமுதிர்ச்சி பெறவேண்டியுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

இதனை கருத்திற்கொண்டே சர்வதேசத்தின் நம்பிக்கையை இழக்காத வகையில் உள்ளூராட்சி அரசியலுக்கு அப்பால் தேசிய அரசியலையும் வழிநடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் முஸ்லிம் சமூகம் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளது.

இதற்காக நோர்வே நாட்டினை விமர்சிக்கமுடியும். எனினும் யதார்த்தபூர்வமாக அணுகிய கட்சி என்ற வகையில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை இழக்கமுடியாது என குறிப்பிட்டுள்ளார்.

புத்தளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசார நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், வெறும் கோசங்களால் மக்களிடம் தோல்வி கண்ட சக்திகள் குறித்து சனாதிபதி நன்கு உணர்ந்துள்ளார்.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளில் மக்களின் ஆணையான பேச்சுவார்த்தையில் தனித்தரப்பு என்ற விடயத்திற்கு கட்டுப்பட்டே தமது ஆணையை முஸ்லிம் காங்கிரஸ் சனாதிபதிக்கு வழங்கும் என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் உளளூராட்சி தேர்தல் சனநாயக ஐக்கிய முன்னணிக்கான மக்களின் ஆதரவை எடுத்துக்காட்டும் என கட்சியின் தலைவர் ஹாபிஸ் நசீர் தெரிவித்துள்ளார். (32)

# எம்மைப் பின்பற்றியே ஆளும் தரப்பு செயற்படுகின்றது

**- நுவரெலியாவில் ரணில் தெரிவிப்பு**

ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து வேலைத்திட்டங்களுமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் செயற்படுத்தப்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் உரிய தீர்வை எடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், கடந்த தேர்தலில் கூட்டமைப்பாக போட்டியிட்டவர்கள் நான்கு மாதங்களுக்குள் பிரிந்துள்ளனர்.

அன்று கூட்டு ஆட்சியை ஏற்படுத்தியவர்கள் இன்று சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுகின்றனர் என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்

ஜே. வி. பி தம்மிடம் கிராம ஆட்சியை ஒப்படைக்கக்கோருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தம்மிடம் கிராம ஆட்சியை கையளிக்கக்கோருகிறது.

இந்த நிலையில் மக்கள் குழப்பங்களை தவிர்க்கும் வகையில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தீர்மானம் எடுப்பர் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(32)

# கற்பிட்டிக்கடலில் காணாமல்போன எட்டுக் கடற்படையினர் குறித்து தகவலில்லை

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பகுதியில் கடந்த சனி இடம்பெற்ற வெடிச்சம்பவத்தின் பின்னர் காணாமல் போனதாக கூறப்படும் எட்டுக் கடற்படையினரையும் தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் காணாமல் போனவர்கள் தொடர்பில் தடயங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சந்தேகத்துக்கிடமாக நடமாடிய படகு ஒன்றை அண்மித்த போது படகில் இருந்தோர் தமது படகை வெடிக்கவைத்தபோதே கடற்படையினர் காணாமல் போனதாக படைத்தரப்பு செய்திகள் தெரிவித்தமை தெரிந்ததே. இதில் ஒரு அதிகாரி உட்பட எட்டுப் படையினர் காணாமல் போனதும் மேலும் 11படையினர் காயங்களுடன் மீட்கப்பட்டமையும் தெரிந்ததே.

# மஹாபொல புலமைப்பரிசில் தொகை 800 ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)

மஹாபொல புலமைப்பரிசில் தொகை 800 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவித்தலை சனாதிபதி மகிந்தராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் 300 ரூபா அதிகரிப்புடன் புலமைப்பரிசில் தொகை 800 ரூபாவால் அதிகரிக்கப் படுவதாக அவர் அறிவித்துள்ளார். சனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் முதல் நடைபெற்ற மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வின் போது சனாதிபதி இந்த அறிவித்தலை விடுத்தார். (32)

# புதிய மின் திட்டங்களை உருவாக்க அரசு திட்டம்

**- பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே**

(கொழும்பு)

சிறிலங்காவில் மேலும் பல புதிய மின் திட்டங்களை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மின்துறை பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது;

நாட்டின் மின் கட்டணத்தை பாரியளவில் குறைக்க அரசாங்கம் பல மின் திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளது. ஆசியாவிலேயே சிறிலங்காவில்தான் மின்கட்டணம் அதிகம். தற்போது நாட்டின் 72 வீதமான மின் தேவையே பூர்த்தி செய்யப்படுகிறது. எதிர்வரும் 2010 ஆம் ஆண்டில் இது 92 வீதமாக உயர்த்தப்படும்.

பல உத்தேச சிறு மின்திட்டங்கள் தனியார் பங்களிப்புடன் செய்யப்படுவதால் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் எதிர்க்கின்றன. அரசியல் மற்றும் வேறு சில இடையூறுகளால் நுரைச்சோலை மின்திட்டம் தாமதிக்கப்பட்டது.

மொரகொல, உம ஓய ஜின் கங்க மற்றும் ப்ராண்ட்லாண்ட் மின் திட்டங்களும் மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. எதிர்ப்புக்கள் இருந்தபோதும் இந்த மின்திட்டங்களையும் அரசாங்கம் விரைவில் செயற்படுத்தும் என்றார் அவர்.

# சமுர்த்திக் கொடுப்பனவில் பாரிய மோசடி!

(கொழும்பு)

சிறிலங்காவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி உதவிக் கொடுப்பனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த மோசடிச் சம்பவங்களுடன் தொடர்புடைய 307 அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடிகளில் ஈடுபட்டுள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 235 பேர் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் என்றும் 72 பேர் சமுர்த்தி முகாமையாளர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.(32)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் பணிகள் அனைத்தும் நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களுக்கான பிரச்சாரப் பணிகள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் வாக்களிப்புகளுக்கான அனைத்துப் பணிகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 330 உள்ளூராட்சி சபைகளில் 261 சபைகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவுகளே எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பான விடயம் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தங்கியுள்ள அதேநேரம், வடக்குகிழக்கின் 45 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (32)

# அரசாங்க கணக்காய்வாளர் பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க கணக்காய்வாளர்கள் பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

தமது சுயாதீன செயற்பாடுகளுக்கு பாதகம் ஏற்படுத்தப்படுவதாக தெரிவித்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் திறைசேரியின் செயலாளரின் செயற்பாடுகளை அரசாங்கத்தின் கணக்காய்வாளர்கள் கண்டித்துள்ளனர்.தமது சுயாதிபத்திய தன்மை பாதுகாக்கப்படாமை காரணமாக தொழிலில் ஈடுபடமுடியாதுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் பாராளுமன்றத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிலையில் அமைந்துள்ளதாக அரசாங்க கணக்காய்வாளர் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அதிக அதிகாரம் வழங்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள போதும் அது தாமதப்படுத்தப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (32)

# வாகன விபத்து

மதுபோதையில் இருந்தவர்கள் பயணம் செய்த வாகனம் ஒன்று அலவத்துக்கொடயில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது வாகனத்தில் பயணித்த ஏழு பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அலவத்துக்கொட பொலிஸ் பொறுப்பதிகாரி சமரக்கோன் தெரிவித்தார். (32)

# ஒரு வார விடுமுறை

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களின் போது வாக்கெடுப்பு மையங்களாகவும் வாக்கு எண்ணும் மையங்களாகவும் செயற்படும் பாடசாலைகள் நேற்றுமுதல் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை வாக்கு எண்ணும் மையங்களாக செயற்படும் பாடசாலைகளுக்கு நேற்று முதல் ஒரு வாரகால விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.(32)

# இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு வரிக்குறைப்பு

**- ஏப்ரல் முதல் அமுல்**

(கொழும்பு)

எதிர்வரும் மாதம் முதல் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரிகள் குறைக்கப்படவுள்ளன.

இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சுமார் இரண்டாயிரம் பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் இதில் அடங்குகின்றன.

இதன் அடிப்படையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முடிவுப்பொருட்களுக்கான வரிகள் 28 வீதத்தில் இருந்து 8.40 வீதமாக குறைக்கப்படவுள்ளன.

கைத்தொழில் மற்றும் இயந்திரங்களுக்கான இறக்குமதி வரிகள் 2.5 வீதத்தில் இருந்து 0.75 வீதமாக குறைக்கப்படவுள்ளன.

இதேவேளை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வரிகள் எதிர்வரும் ஜுலை மாதம் முதல் 30 வீதத்தால் குறைக்கப்படவுள்ளன.

இந்தியா கடந்த வருடத்தில் மாத்திரம் 1.4 பில்லியன் பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தது.

இது இலங்கையின் இறக்குமதியில் 17 சதவீதமாக கணக்கிடப்பட்டிருந்தது. (32)


## கடைநிலம் வழங்கல்

### கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி

கரைச்சிப்பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கிளிநொச்சி புகையிரதப் பாதையில் கடைநிலம் வழங்குவது தொடர்பான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 29.03.2006 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபையில் நடைபெறவுள்ளது. இதற்கு கடைகோரி விண்ணப்பித்திருப்பவர்கள் தவறாது உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் ஏற்கனவே கடந்த மாதம் நடைபெற்ற நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டு கடைநிலம் வழங்கப்பட்டவர்களும், கடை அமைப்பது தொடர்பான ஆலோசனை வழங்கவேண்டியுள்ளதால் அவர்களும் அன்றையதினம் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**விசேட ஆணையாளர்,**
**கரைச்சிப்பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(சி-14224)

NECORD

# தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சு
## வடக்கு-கிழக்கு மாகாணசபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆ.அ.வ" கடன் இல 1846-SRI(SF)

# கேள்வி அறிவித்தல்-10

### கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/HS/15/P6 | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலத்தோற்ற அமைப்பு வேலைகள் (**Landscaping work**). | M7 | 35,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவுதரப்படுத்தலின் கீழ் M7 (கட்டங்கள்) அல்லது அதற்கு மேலான தரத்தில் தம்மை உள்ளூர் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொண்ட எல்லா கம்பனிகளுககும், இலங்கை தேசிய ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் (NCASL)அல்லது ஆசிய அபிவிருத்திவங்கியின் அங்கத்துவ நாடொன்றைச் சார்ந்த வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவுனர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

IV. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது

V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட்/கார்ப் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதி திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல:021 228 5734, தொலைநகல்: 021 228 5735, மின்னஞ்சல் knnecord@sltnet.lk.

06. கேள்வி ஆவணங்களை 28.03.2006 ஆம் திகதியிலிருந்து 10.04.2006 ஆம் திகதி வரை காலை 9.30யிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 17.04.2006 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று 06.04.2006 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

*தி. இராசநாயகம்,*
*தலைவர், மாவட்ட கேள்விச் சபை,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி-14229)

## சர்வதேச நடுவர் போட்டியில் வெங்சர்க்கார்



சர்வதேச கிரிக்கெட் சபையில் நடுவர் தேர்வு நடக்கிறது. இதற்காக இந்திய கிரிக்கெட் சங்கம் முன்னாள் வீரர்கள் கிரண் மோரே, ஸ்ரீநாத், ராபின் சிங், தேசிய கிரிக்கெட் அக்கடமி தலைவர் சிவலால்யாதவ் ஆகியோர் பெயரை சிபாரிசு செய்திருந்தது. இப்போது அவர்களுடன் முன்னாள் தலைவர் வெங்சர்க்கார் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. வெங்சர்க்கார் மும்பை கிரிக்கெட் சங்க துணைத் தலைவர் மற்றும் கிரிக்கெட் திறன் ஆராய்ச்சி வளர்ச்சிக் குழுவின் தலைவர் ஆகிய பதவிகளில் இருக்கிறார்.




## இந்தியா- இங்கிலாந்து ஒரு நாள் தொடர் இன்று



இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி இன்று டில்லியில் ஆரம்பமாகின்றது.

இந்தியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டு ஆடிவரும் பிளின்டொப் தலைமையிலான இங்கிலாந்து அணி மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை சமப்படுத்தியிருந்தமை தெரிந்ததே.



இந்நிலையில் ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இதேவேளை, இன்று ஆரம்பமாகும் போட்டியில் சேவாக் ஆடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.




இந்திய கிரிக்கெட் சபையின் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. இதில் கிரிக்கெட் வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பங்கேற்க வந்த அணியின் தற்போதைய தலைவர் ராவிட்டும், முன்னாள் தலைவர் கங்குலியும் உற்சாகமாக கைகுலுக்கி கொள்கின்றனர்.

## நேப்பியர் டெஸ்ட் போட்டி மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் தடைப்பட்டது

நியூசிலாந்து மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிகிகெட் போட்டியின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றாக நிறுத்தப்பட்டது.

இரு நடுவர்களும் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 12.30 மணியளவில் மைதானத்தைப் பார்வையிட்டபின் போட்டியை நடத்த முடியாது என அறிவித்தனர். இதனால், நேற்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.



முன்னதாக முதல் இரு நாட்களும் மழை காரணமாக கைவிடப்பட்ட இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வலுவானதொரு ஆரம்பத்தை ஏற்படுத்தியிருந்தும் அது மழையால் பலனளிக்காமல் போனமையையிட்டு அந்நாட்டு ரசிகர்கள் பெரும் கவலையில் உள்ளனர்.



மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் 4-1 என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வியடைந்தமை தெரிந்ததே.

## வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியினை முன்னிட்டு பெண்களுக்கான ஈருருளி ஓட்டமும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும்






வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியினை முன்னிட்டு இல்லங்களுக்கிடையேயான பெண்களுக்கான ஈருருளி ஓட்டமும்,ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டிகளும் கடந்த வெள்ளிக் கிழமை காலை ஆறு மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக இருந்து வட்டக்கச்சி மகாவித்தியாலய நுழைவாயில் வரையான போட்டி பாடசாலையின் முதல்வர் கனகசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வினை தமிழீழ வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமார், துப்பாக்கிச் சூட்டின் மூலம் ஆரம்பித்து வைத்தார். ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தினை பெண்களுக்கான ஈருருளி ஓட்டத்தில் முதலாம் இடத்தினை க.கிருசா 18 நிமிடம் 24 வினாடி, இரண்டாமிடம் நா.தர்சிகா 18 நிமிடம் 36 வினாடி, மூன்றாமிடம் செ.நித்தியா 18 நிமிடம் 52 வினாடியில் முடிவிடத்தை அடைந்தனர்.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் ஒன்பது கிலோ மீற்றர் போட்டியில் முதலாமிடம் தே.பாஸ்கரன் 30 நிமிடம் 53 வினாடி, இரண்டாமிடம் ஸ்.எட்வின்ராஜ் 32 நிமிடம் 11 வினாடி, மூன்றாமிடம் அ.நிர்மலன் 32 நிமிடம் 48 வினாடிகளில் தமது குறித்த இலக்கை அடைந்தனர். வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி 2006-04-08 அன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளமை. குறிப்பிடத்தக்கது.

(12)

## முதலாவது டெஸ்ட்போட்டி சிறிலங்கா 185, பாக்.124/4

சிறிலங்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி அதன் முதல் இனிங்சில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.




கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய களமிறங்கிய சிறிலங்கா அணி அதன் ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. 32 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடியில் இருந்தவேளை டில்சான் மகறூப் இணைசிறிலங்கா அணியை ஓரளவு கௌரவமான ஓட்ட எண்ணிக்கைக்கு இட்டுச்சென்றனர்.இறுதியில் சிறிலங்கா அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது.இதில் டில்சான், 69 ஓட்டங்களையும், மகறூப் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் முகமட்சமி நான்கு விக்கெட்டுக்களையும், கனேரிய மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இனிங்சை ஆடும் பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது நான்கு விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் இம்ரான் பாகன் 69 ஓட்டங்களைப் பெற்றார். ஆடுகளத்தில் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் 30 ஓட்டங்களுடனும் ரசாக் ஒரு ஓட்டத்துடனும் உள்ளனர் பந்து வீச்சில் மாலிங்க, மகறூப் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டம் மழைகாரணமாக முற்றாக கைவிடப்பட்டமை தெரிந்ததே.

## டர்பன் டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்.அணி பலமான நிலையில்



(டர்பன்)

தென்னாபிரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி வலுவானதொரு நிலையைப் பெற்றுள்ளது.

நேற்று முன்தின முடிவில் 125/1 என்ற நிலையிலிருந்து நேற்றைய ஆட்டத்தை தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி நேற்று 307/4 என்ற நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

இதன்மூலம் தென்னாபிரிக்காவிற்கு 410 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்கும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹெய்டனும் முறையே 116,102 ஓட்டங்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கஅணி விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

நாளையபோட்டியில் ஐந்தாம் நாளாகும்.

இஸ்கோர்விபரம்:- அவுஸ் முதல் இனிங்ஸ் 369, இரண்டாவது இனிங்சை 304 /4, தென்னாபிரிக்கா முதல் இனிங்சை 267, தெ.ஆபி இரண்டாவது இனிங்ஸ் 29/0

## சிந்தனைக்கு



சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 28.03.2006

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## என்றும் உண்மையே பேசினர்!

இனப்பிரச்சினைத்தீர்விற்கு சனாதிபதி மகிந்தராஜபக்ஷ ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்படுவது அவசியம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளகருத்தில் ஆழமான உண்மை பொதிந்துள்ளது என்ற ஐக்கியதேசியக்கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க செய்துள்ள மதிப்பீடானது முற்றிலும் சரியானதே.

இனப்பிரச்சினைத்தீர்விற்கு ஒரு நீதியான தீர்வை சிறிலங்கா அரசாங்கம் காணவேண்டுமானால் இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுதல் அவசியமானதாகும். அத்தோடு அவை பௌத்த -சிங்கள தீவிர அடிப்படைவாதிகளை ஓரம் தள்ளுவதற்கும் இது அவசியமானதாகும். அதைவிடுத்து ஒரு புறத்தில் பௌத்த- சிங்கள அடிப்படை வாதிகளை இணைத்துக்கொண்டோ அன்றி அவர்களுடன் கூட்டுக்களை வைத்துக்கொண்டே இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பது என்பது சாத்தியப்பாடானதல்ல.

விடுதலைப்புலிகள் இயக்கமானது எப்பொழுதும் இனப்பிரச்சினை விடயத்தில் யதார்த்தத்தினையே பேசிவந்துள்ளது. ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்விடயத்தை எவ்வேளையிலும் இனவாதக்கண்ணோட்டத்திலேயே நோக்கினர். இதனால் விடுதலைப் புலிகளின் பேச்சுக்கள் அவர்கள் காதுகளில் விளங்கவில்லை.

தமிழ் மக்களின்உரிமைப்போராட்டத்தை இராணுவரீதியில் அடக்கிவிடுதல் சாத்தியப்பாடற்றதெனப் புலிகள் கூறியபோது எவரும் அதை ஏற்கவில்லை. இறுதியாக விடுதலைப்புலிகளுடன் சனாதிபதி சந்திரிகா போரை நடத்தத்தீர்மானித்தார். சமாதானத்திற்கான யுத்தம் என்ற பிரகடனத்துடன் நடத்தப்பட்ட இப்படையெடுப்புக்களின ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த பின்பே பேச்சுவார்த்தைகள் என்றார். ஆனால் எதிர்பார்ப்பு தோல்வியில் முடிய புலிகள் ஆயுதங்களைக்கீழே வைத்தால் தான் பேச்சுவார்த்தை என்றார்.

ஆனால் விடுதலைப்புலிகள் அதற்கு உடன்படவில்லை. விடுதலைப்புலிகள் எப்பொழுதும் பேச்சுவார்த்தைக்குத்தயாராக இருந்தனரே ஒழிய ஆயுதங்களைக்கீழே போடவோ ஒப்படைக்கவோ தயாராக இருந்ததில்லை. இறுதியில் விடுதலைப்புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க யுத்தநிறுத்த உடன்பாடு செய்து கொண்டபோது அதனைப்பார்த்துக்கொண்டிருப்பதைத்தவிர சந்திரிகாவால் வேறு எதையும் செய்ய முடியவில்லை.

இதேபோன்று யுத்தநிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்படும் போது துணைஆயுதக்குழுக்கள் வடக்கு கிழக்கில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என விடுதலைப்புலிகள் வலியுறுத்திய மைக்கும் வலுவான காரணம் இருந்தது. முதலில் அரசாங்கததரப் பில் புலிகளின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடு குறித்து சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளும் சரி விடுதலைப்புலிகள் இவ்ஒட்டுக்குழுக்கள் தம்மைப்பலவீனப்படுத்தி விடுமென அச்சப்படுகின்றனர் என்றோ இவ் ஒட்டுக்குழுக்கள் அரசியல் ரீதியில் பலபட்டுவிடுவார்கள் என்ற பீதியின் காரணமாகப் புலிகள் இக்கோரிக்கைகளை முன்னெடுப்பதாகக்கருதி னாலோ அவர்கள் தவறான மதிப்பீட்டைச்செய்வதாகவே கொள்ள முடியும்.

ஏனெனில் யுத்த காலத்திலும் சிறிலங்கா ஆயுதப்படையுடன் சேர்ந்து பல தமிழ் ஒட்டுக்குழுக்கள், முஸ்லிம் குழுக்களும் காடையர்களும் இயங்கியவர்கள் தான். அவ்வேளையில் கூட விடுதலைப் புலிகளை அவர்களால் வெற்றிகொள்ளவோ விடுதலைப்புலிகளின் வெற்றிகளைத்தடுத்து நிறுத்தி விடவோ முடியவில்லை. அப்பாவிகள் மீதான படுகொலைகள், பாலியல் வல்லுறவுகளையே அவர்களால் மேற்கொள்ளமுடிந்தது.

அதேசமயம் அரசியல் ரீதியில் அவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்றும் புலிகள் அஞ்சவில்லை. ஏனெனில் அவர்கள் சிங்கள அரசின் எடுபிடிகளாக தமிழ் மக்களின் தார்மீக ரீதியிலான உரிமைப்போராட்டத்திற்கு விரோதமாகச் செயற்படுபவர்கள் ஆகையினால் சில சுயநலவாதிகளின் ஆதரவைப்பெறமுடியுமே ஒழிய தமிழ்மக்களின் ஆதரவை அவர்களால் பெற்றுக்கொள்ளுதல் என்பது சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை.

அவ்வாறானால் விடுதலைப்புலிகள் இவர்கள் குறித்து ஏன் அக்கறை கொள்ள வேண்டும்? எனக்கேள்வி எழுவது நியாயமானதே. இதற்கான பதில், இவர்கள் சமாதானத்தின் விரோதிகள் என்பதே. ஏனெனில் இவர்கள் தமது சுயநலத்திற்காகச் சிறிலங்காவிலுள்ள சமாதானத்தின் விரோதிகளுடன் சேர்ந்து சமாதானமுயற்சிகளுக்குத் குந்தகம் விளைவிப்பார்கள் என்பதே ஆகும்.

இன்று நடக்கும் சம்பவங்கள் இதனை வலியுறுத்துவதற்குப் போதுமானதாகும். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வு தமிழ் மக்களின் இயல்பு வாழ்கை என்பன குறித்து ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்காஅரசு -புலிகளுடனான பேச்சுவார்த்தை இன்று துணை இராணுவக்குழுக்கள் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள் குறித்தும் மாறியதாக திசைமாறிச்சென்று கொண்டிருக்கின்றது.

அதாவது விடுதலைப்புலிகள் யதார்த்த பூர்வமான விடயங்களையும் உண்மைகளையுமே பேசி வந்துள்ளனர். ஆனால் இவற்றைச்சிறிலங்கா ஆட்சியாளர்கள் கருத்திற்கொண்டதாக இல்லை. தமது தேவைக்கும் நலனுக்கும் ஏற்பவே அவர்கள் நிலைமையை கையாண்டனர். தற்பொழுதும் அவ்வாறே மேற்கொண்டும் வருகின்றனர். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காலகட்டத்திலும் உண்மையும் யதார்த்தமும் புறக்கணிக்கப்படும் போது பிரச்சினைகளின் தீர்வுகள் சிக்கல் நிறைந்ததாகவும், நெருக்கடி நிறைந்தாகவும் மாறிவிடுகின்றனதென்பது நிதர்சனமாகும்.

# திருமலை துறைமுகப்பகுதியில் விதிக்கப்பட்ட மீன்பிடித்தடைக்கு எதிராகப் பேரணி

(திருகோணமலை)

துறைமுகப்பகுதியில் தம்மை மீன்பிடித்தொழிலுக்கு அனுமதிக்காமையால் பாரிய பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளமையை வெளிப்படுத்தும் முகமாக திருகோணமலையில் நேற்று முற்பகல் கடற்றொழிலாளர்களின் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்

பேரணி அரசடி, உவர்மலை மற்றும் கஸ்தூரிநகர் ஆகிய இடங்களில் இருந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் வரை நடத்தப்பட்டது.

இதன்பின்னர் பேரணியினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் தமது கோரிக்கை மனுவை கையளித்தனர்.

கடந்த சனவரி மாதம் கடற்படை படகின் மீதான தாக்குதலின் பின்னர் துறைமுகப்பகுதியில் கடற்றொழிலுக்கான அனுமதி மறுக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (25,32)

# இராணுவம், ஒட்டுக்குழுக்களுக்கு எதிராக மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொங்கி எழும் மக்கள்படை எச்சரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் ஒட்டுக் குழுக்களின் நாசகார நடவடிக்கைகளுக்கு எதிராக பொங்கி எழும் மக்கள் படை மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாக பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை "மீண்டும் தொடங்கும் எமது பணி" எனும் தலைப்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சிங்கள அரசாங்கத்தின் மற்றுமொரு கொடுமையான, அரக்கத்தனமான முகம் இந்த உலகத்துக்கே காட்டப்பட்டிருக்கிறது. நடந்து முடிந்த ஜெனீவாப் பேச்சு வார்த்தையில் ஏற்றுக் கொண்டதனைப் போன்று ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்கள் களையப் படவில்லை. மாறாக எமது தாயகப் பகுதிகளில் சிங்கள இராணுவமும், இராணுவப்புலனாய்வுத் துறையும் ஒட்டுக் குழுக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கி முகாம்களை அமைத்துக் கொடுத்து ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றார்கள். குறிப்பாக அண்மையில் களுவாஞ்சிக்குடி, எருவில் பகுதியில் நடராஜா நவேந்தினி எனும் ஒரு யுவதி கடத்தப்பட்ட சம்பவம், அதேபோல் பல மாணவர்கள், இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்ததென்பது இது வரையும் தெரியவில்லை. அதே போல் முன்பு கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களின் நிலைமை பற்றி இன்று வரைக்கும் தகவல் சொல்லாமலேயே இலங்கை அரசாங்கம் இழுத்தடித்துக் கொண்டு வருகிறது. அத்தோடு சிங்கள இராணுவம் திட்டமிட்டு எம்மக்களின் கலாச்சாரத்தையும் சீரழித்து வருகின்றான்.

குறிப்பாக இளைஞர்களையும், மாணவர்களையும் மதுப்பழக்கத்திற்கு உள்ளாக்குவதும், எமது சகோதரிகளை பாலியல் சேஷ்டைக்கு உள்ளாக்குதல் போன்ற நடவடிக்கையோடு இப்போது மட்டக்களப்பில் எயிட்ஸ் நோயையும் பரப்புகின்ற நடவடிக்கையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். என்பதால் நாம் விழிப்பாக இருக்க வேண்டிய நேரம் இதுதான். மேலும் எம் மக்களின் கலாசாரச் சீரழிவுகளை மேற்கொள்ளும் எம்மவர்களுக்கும், நீலப்படங்களை விநியோகிப்பவர்களுக்கும் இது ஒரு இறுதிஎச்சரிக்கையாக இதனூடாக விடுக்கின்றோம்.

எனவே அண்மைக் காலமாக எம்மால் நிறுத்தப்பட்டிருந்த அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் தொடங்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எமது மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவையும், கடப்பாடும் எம்எல்லோருக்கும் உள்ளதால் அனைவரும் அணிதிரண்டு எம்மைத் தாக்குவபனை தாக்குவோம் மக்கள் படையாகிய எமது தாக்குதலின் கொடூரத்தினை சிங்களக் கூலிப்படை நன்கறிவான். எனவே மீண்டும் அனைவரும் பொங்கி எழுந்து எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.

# ஹெல்பின் அம்பாந்தோட்டை நீதிவிசாரணை மகிந்தவின் அடிப்படை உரிமை மீறப்பட்டது

## - சிறிலங்கா உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கடந்த சனாதிபதித் தேர்தலின் போது ஹெல்பின் ஹம்பாந்தோட்டை நிதி தொடர்பில் இரகசிய பொலிசார் விசாரணை மேற்கொண்டமையின் மூலம் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

பிரதமநீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழு இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கியது.

இதன் அடிப்படையில் மனுதாரரான முன்னாள் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவின் அடிப்படை உரிமையை மீறியமைக்கான நேரடிப் பொறுப்பை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, இரகசிய பொலிஸ் உதவி பொலிஸ் அதிபர் லயனல் குணதிலக்க மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் ஆகியோர் ஏற்கவேண்டும் என உயர் நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

எனவே குறித்த பிரதிவாதிகள் தமது சொந்தப் பணத்தில் தலா ஒரு இலட்சம் ரூபாவை மனுதாரருக்கு செலுத்த வேண்டும்.

அத்துடன் அரசாங்கம் நட்டஈடாக மனுதாரருக்கு இரண்டு இலட்சம் ரூபாவை செலுத்த வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்திலிருந்து நாடுகடத்தப்பட்ட சிறிலங்கா சிறுமிக்கு ஐ.நா. அகதி அந்தஸ்து

## - நியூசிலாந்து அரசுமீது கண்டனம்

நியூசிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட 16 வயது இலங்கைச் சிறுமியை ஐக்கிய நாடுகள் சபை அகதியாக அங்கீகரித்துள்ளது.

அச்சிறுமி ஹொங்கொங்கில் அகதியாக வாழலாம் என்றும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. நியூசிலாந்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு அகதிக்கான தகுதி கோரி அச்சிறுமி விண்ணப்பித்திருந்தார். அவரது கோரிக்கையை நியூசிலாந்து அரசாங்கம் நிராகரித்தது.

சிறிலங்காவிற்கு தான் சென்றால் பாலியல் ரீதியாகவும், உடல் ரிதியாகவும், தான் துன்புறுத்தப்படலாம் என்றும் அச்சிறுமி விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவரை சிறிலங்காவிற்கு நியூசிலாந்து அரசாங்கம் நாடு கடத்தியது. இந்நிலையில் அப்பெண் ஹொங்கொங்கில் அகதியாக வாழ்வதை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் ஏற்றுக் கொண்டிருப்பதாக நியூசிலாந்தின் தொழிலாளர் செயலகத்தின் பிரதிச் செயலாளர் மேரிஅன்னி தாம்சன் தெரிவித்தார்.

நியூசிலாந்திலிருந்து அச்சிறுமி வெளியேற்றப்பட்ட போது அப்பெண்ணின் தாயார் ஹொங்கொங்கில் வசித்து வருகிறார்.

இதனிடையே இப்பிரச்சினையில் நியூசிலாந்து அரசாங்கம் மீது அந்நாட்டு கிரீன் கட்சியினர் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளனர். அக் கட்சியின் குடியேற்றப் பிரிவுப் பேச்சாளர் கெய்த்லொக்கூறியதாவது; நியூசிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட சிறுமிக்கு ஐக்கிய நாடுகள் சபை அகதி அங்கீகாரம் அளித்துள்ளது எனில் இந்நாட்டு அரசாங்கத்திற்கு முன்னர் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருப்பதாகவே கருதுகின்றோம்.

இது தொடர்பில் குடியேற்றத்துறை அமைச்சர் டேவிட் கன்லைப்புக்கு கடிதம் ஒன்றை அனுப்புகிறோம். நியூசிலாந்தின் குடியேற்றத்துறை எப்படி இத்தகைய ஒரு தவறைச் செய்தது என்பதுதொடர்பாக அறிய விரும்புகிறோம்.

இந்த விடயத்தில் சிறார்களின் உரிமை தொடர்பான,சிறார் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களைச் செயற்படுத்த நியூசிலாந்து தவறிவிட்டது.

எதிர்காலத்தில் இப்படியான தேவையற்ற நாடுகடத்தல்கள் நடைபெறக்கூடாது என்பதால் தான் இந்தச் சம்பவத்தை மீளாய்வு செய்ய வலியுறுத்துகிறோம் என்றார் அவர்.

# சம்பூர் மீதான தாக்குதல் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்

## —"நிசோர்"விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு

திருகோணமலை சம்பூர் மீன்பிடிக் கிராமம் மீது கடந்த மார்ச் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சிறிலங்காக் கடற்படையினர் நடத்திய தாக்குதலானது, சொத்துரிமை மறுப்பு வாழ்வாதார மறுப்பு பாதுகாப்பு மறுப்பு, சிறார்கல்வி உரிமை மறுப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது என சம்பூர்தாக்குதல் தொடர்பில் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகமான நிசோர் தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறிலங்காக் கடற்படையினரால் ஒரு தலைப்பட்சமாக நடத்தப்பட்ட இத் தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக எவரும் உயிரிழக்கவில்லை.

சிறிலங்காக் கடற்படையினர் தாக்குதல் தொடர்பில் சம்பூர் மீனவர் கூட்டுறவுச் சமாசத்தின் தலைவர் கிருஸ்ணபிள்ளை கூறுகையில்,நீண்ட காலத்துக்குப் பின்னர் கடந்த மார்ச் ஐந்தாம் திகதியன்று சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அளித்திருந்த படகுகள், வலைகளுடன் மீன்பிடித் தொழிலுக்கு சில குடும்பங்கள் சென்றன. அப்போது சிறிலங்காக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் அச்சமடைந்த மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களை விட்டு விட்டு ஓடிவந்துவிட்டனர் என்றார்.

கடந்த நான்கு ஆண்டுகால யுத்த நிறுத்த ஒப்பந்தக் காலம் முழுமைக்கும் சிறிலங்கா கடற்படையினரால் சம்பூர் மீனவர்கள் தொடர்ந்து சித்திரவதைகளுக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் கடலிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குள் மீன்பிடிக்க வேண்டும் என்பது போன்ற தடைகள் விதிக்கப்பட்டன. அண்மைக்காலத்தில் இந்தக் கடற்பரப்பில் கூட மீன்பிடிக்க இயலாத அளவுக்கு சித்திரவதைகள் அதிகரித்துள்ளன. கடந்த மார்ச் 19 ஆம் திகதியன்று விளக்குகள் உதவியுடன் கடற்கரையிலிருந்து மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். 500 மீற்றர் தொலைவில் கூட அவர்கள் மீன்பிடிக்கவில்லை. ஆனால் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி இரு படகுகளை சேதமாக்கியுள்ளனர்.

மார்ச் 20 ஆம் திகதியன்று முற்பகல் 11 மணியளவில் சிறிலங்கா கடற்படையினர் சம்பூர் கிராமத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். சிறிலங்காக் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தால் கிராம மீனவர்களின் வீடுகளின் மீதான செல் தாக்குதல்கள் எப்படி நிகழ்ந்திருக்கும் என்று அக்கிராம மக்கள் ஒரு கேள்வியை எழுப்பி வருகின்றனர். சம்பூரின் மீனவர்களின் மறுக்கப்பட்ட உரிமைகள்; செல்தாக்குதலுக்கு முகம் கொடுக்கின்ற சிறாரின் மனநிலையை கற்பனை செய்துபார்ப்பது கடினம் அல்ல. இந்தத் தாக்குதலின் போது தமது பாடசாலை சிறார் கல்விச் செயற்பாடுகள் எத்தகைய பாதிப்புக்குள்ளானது என்பதை அதன் அதிபர் எம்மிடம் தெரிவித்தார். அதேபோல் பெற்றோர்கள் எப்படி தங்களது குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஓடினர் என்பதையும் அவர் தெரிவித்தார். உறங்கிக் கொண்டிருந்த குழந்தைக்கு அருகாமையிலும் கூட செல் விழுந்து வெடித்துள்ளது.

இந்தச் செல் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலையால் வீடுகளை இழந்தவர்களே இப்போதும் பாதிப்புக்குள்ளானவர்கள். இத்தாலிய அரச சார்பற்ற நிறுவனமான இண்டெராசஸ் அலுவலகம் சேதமடைந்துள்ளது. வீடு கட்டமைப் புப்பணியில் இந்நிறுவனத் தினர் ஈடுபட்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடந்ததால் அப்பணி சீர்குலைந்து விட்டது.சிறிலங்கா கடற்படையினரது பாரிய தடை விதிப்புகளால் மீனவர்களின் வாழ்வாதார உரிமை பாதிக்கப்படு கிறது. எங்கே மீன் பிடிக்க வேண்டும்? எப்போது மீன் பிடிக்க வேண்டும்? என்ன மாதிரியாக உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்?என்கிற தடைகளை அண்மை மாதங்களில் அதிகரித்துள்ளனர்.இந்தநிலையில் அண்மைய செல்தாக்குதலானது அவர்கள் கடற்பிரதேச நீர்ப்பரப்புக் குள் நுழைவதற்குக் கூட அச்சமேற்படுத்தி இருக்கிறது என்று நிசோர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் சந்திப்பு

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்களுக்கும், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை 11.00 மணியளவில் தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது மனித உரிமைச்சட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இதன்போது தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும், காவல்துறை நிர்வாகப்பொறுப்பாளர் தே. கானகன், காவல்துறை குற்றத் தடுப்புக் கண்காணிப்பாளர் பா.இயலரசன், காவல்துறை பயிற்சிக்கல்லூரி கண்காணிப்பாளர் ச. தமிழரசன் ஆகியோரும்,

யு.என்.எச்.சி.ஆர் தரப்பில் இலங்கைக்கான ஐ. நா. மனிதஉரிமைகள் ஆலோசகர் "ரொறி மொங்கோவன்", யு.என்.எச்.சி.ஆர் கிளிநொச்சி தலைமை அதிகாரி "மரின் டின் கஜ்டொம்கய்" ஆகியோரும் கலந்துரையாடினர். இச்சந்திப்புச் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றுள்ளது.



### புத்தளம்...

கடலில் நின்று மீன் பிடிக்கவல்ல படகுகளும் மீன்பிடிப்பது இதனால் தடைசெய்யப்பட்டுள்ளது.இது குறித்து இலங்கை கடற்படை அதிகாரியான டி.கே.பி. தஸநாயக்க கூறுகையில்: இப்படியான தடை 2002இல் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாவதற்கு முன்பு இருந்தாகவும் அது மீண்டும் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை விடுதலைப்புலிகளின் செயற்பாட்டினால் எழுந்துள்ள அச்சுறுத்தல் காரணமாகவே இந்த தடைவிதிக்கப்படுவதாகவும் ஆழ் கடலில் இருந்து இழுவைப்படகுகள் மூலம் ஆயுதங்கள் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவும் இந்தத்தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

### கண்....

இச்சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அண்மையில் வவுனியா மாவட்டத்தில் சிறிலங்காப் படையினரும் ஒட்டுக்குழுக்கரும் இணைந்து மேற்கொள்ளும் படுகொலைச் சம்பவங்கள் குறித்தும் சிறிலங்காப் படையினரால் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிச் செயற்பாடுகள் குறித்தும் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரினால் விளக்கப்பட்டுள்ளது.

### படையி...

அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

குடாநாடு தழுவிய ரீதியில் சகல கல்வி நிறுவனங்களின் மாணவர்களும் இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்ததனால் யாழ்.பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, உயர் தொழில் நுட்ப நிறுவனம் என்பன உட்பட பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என எதுவுமே இயங்கவில்லை.

பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் நேற்று இடம் பெறவிருந்த பரீட்சைகள் எவையும் இடம் பெறவில்லை.

மாணவர்கள் எவரும் வகுப்பறைகளுக்கு வராததால் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

அனேகமான பாடசாலை வாயில்களில் இராணுவ அராஜகங்களைக் கண்டிக்கும் சுலோகங்கள் அடங்கிய பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்த சில இடங்களில் சோககீதங்கள் ஒலிக்க விடப்பட்டிருந்தன. இதைவிட அனைத்துப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகம் தொழில் நுட்பக்கல்வி நிறுவனங்கள் என்பனவற்றில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

(33,37)

# புலிகள் என்ற சந்தேகத்தில் 2 பெண்கள் உட்பட நால்வர் கைது

வவுனியாவில் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் நாலுபேரை கைது செய்திருப்பதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ளது.

வவுனியா பூந்தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையில் வீடு ஒன்றில்தங்கியிருந்த விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் இரண்டு பெண்கள் உட்பட நான்குபேர் கைதுசெய்யப்பட்டனர் என்று இராணுவத் தரப்பினர் கூறியுள்ளனர்.

அவர்களிடமிருந்து நான்கு கைக்குண்டுகள், ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 59,ரி-56-மகசீன்கள் 2, கத்தி ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவும் இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நேற்று வவுனியா நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது வரும் 10-ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

### வீடு...

பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் சென்று அதிபர்களையும், ஆசிரியர்களையும் அலுவலகத்தை விட்டு வெளியே வருமாறு அழைத்து வீடு வீடாகச் சென்று மாணவர்களை அழைத்து வந்து வகுப்புக்களை நடத்துமாறும் கூறீ மிரட்டியுள்ளதுடன் பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமமாக பாடசாலைகளுக்கு சமூகம்தராத ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விபரங்களைக்கேட்டு அதிபர்களை மிரட்டியும் உள்ளனர்.

இதனால் அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பீதி ஏற்பட்டு இதேவேளை தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களை பாடசாலைக்குச் செல்லுமாறு கூறி சீறிலங்கா இராணுவத்தினர் மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை தென்மராட்சியின் மீசாலை, அல்லாரை, நுணாவில், கைதடி நாவற்குழி, சாவகச்சேரி, சங்கத்தரனை, கச்சாய்,கொடிகாமம் போன்ற பகுதிகளில் வாழும் மாணவர்கள் மீதே சிறிலங்காப் படையினர் இத்தகைய மிரட்டல்களை விடுத்துள்ளனர். தென்மராட்சியிலுள்ள மேற்படி பகுதிகளில் உள்ள பல வீடுகளுக்குச் சென்று அங்குள்ள மாணவர்களை பாடசாலைகளுக்குச் செல்லுமாறு கூறிப் படையினர் மிரட்டியதால் மாணவர்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

33, 37)

### புலிகளின்...

திறப்பதற்குத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் சிறிலங்கா தரப்பில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு மாறாக 28 நிபந்தனைகள் விதிக்கப்பட்ட கடிதம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரி தியிடம் கண்காணிப்புக் குழுவினர் இக்கடிதத்தை கையளித்தனர். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள்:

- அரசியல் பணிகளில் ஈடுபடுகிறவர்கள் பெயர் விவரம் தெரிவிக்கப்படவேண்டும்.
- இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும் போது புதிய அடையாள அட்டையை இராணுவம் வழங்கும்.
- அரசியல் பணி செய்யும் இடம்,
- அரசியல் பணி செய்கிற காலம்,
- செல்லிடப்பேசி உள்ளிட்ட தொடர்புக்கான விபரங்கள்
- சோதனைச்சாவடியில் வாகனங்கள் சோத னையிடப்படும்.
- எமது கண்காணிப்பின் கீழ்தான் அரசியல் பணிகள்
- அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கொடிகள் பறக்கக் கூடாது அரசியல் அலுவலகங்களின் உள்ளே விடுதலைப் புலிகளின் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தாலும் வெளிப்பார்வைக்குத் தெரியக் கூடாது
- அரசியல் பணிகளில் சிறாரை ஈடுபடுத்தக் கூடாது
- சிறார் படைச் சேர்ப்புக் கூடாது
- வரி அறிவிடுதல் கூடாது
- சிறிலங்கா பொலிசாரின் செயற்பாட்டில் தலையிடக் கூடாது
- புலிகளின் சீருடை இராணுவப் பட்டி உள்ளிட்டவை வைத்திருக்கக் கூடாது
- ஆயுதங்கள் ஏந்தக் கூடாது
- அரசியல் அலுவலகங்களில் சோதனை நடத் தப்படும் என்று அரசாங்கத் தரப்பு நிபந்தனைகள் விதித் திருந்தது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு மாறாக புதிய நிபந்தனைகளை அரசாங்கம் விதித்தமையையடுத்து விடுதலைப்புலிகள் தங்கள் அரசியல் அலுவலகங்கள் திறப்பதை தாற்காலிகமாக ஒத்திவைத்தனர்.

# சாவுஅறிவித்தல்

## திரு.பொன்னம்பலம் பாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இத்தாவிலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னம்பலம் பாலசிங்கம் அவர்கள் 27.03.2006 நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னார் பொன்னம்பலம் செல்லாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், மாணிக்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார். பூபாலசிங்கம் (கந்தபுரம்), மனோரஞ்சிதமலர் (யாழ்), ஜெயராசசிங்கம் (கொலண்ட்),யோகராசசிங்கம் (பிரான்ஸ்), தவறஞ்சினி (லண்டன்) , ஜெயறஞ்சினி (நட்டாங்கண்டல்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார், ஆனந்தராசா (சேவாலங்கா), கயலஞ்சுமி (ஆசிரியர் அக்கராயன் ம.வி.), செல்வநாயகம் (லண்டன்), தர்மப்பிரியா(கொலண்ட்),ரூபா (பிரான்ஸ்), கிருபாகரன் (வெண்புறாநிறுவனம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 28.03.2006 (இன்று) செவ்வாய்க்கிழமை பி.ப.4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(7286)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.